This is a digital copy of a book that was preserved for generations on library shelves before it was carefully scanned by Google as part of a project to make the world's books discoverable online.

It has survived long enough for the copyright to expire and the book to enter the public domain. A public domain book is one that was never subject to copyright or whose legal copyright term has expired. Whether a book is in the public domain may vary country to country. Public domain books are our gateways to the past, representing a wealth of history, culture and knowledge that's often difficult to discover.

Marks, notations and other marginalia present in the original volume will appear in this file - a reminder of this book's long journey from the publisher to a library and finally to you.

**Usage guidelines**

Google is proud to partner with libraries to digitize public domain materials and make them widely accessible. Public domain books belong to the public and we are merely their custodians. Nevertheless, this work is expensive, so in order to keep providing this resource, we have taken steps to prevent abuse by commercial parties, including placing technical restrictions on automated querying.

We also ask that you:

+ *Make non-commercial use of the files* We designed Google Book Search for use by individuals, and we request that you use these files for personal, non-commercial purposes.

+ *Refrain from automated querying* Do not send automated queries of any sort to Google's system: If you are conducting research on machine translation, optical character recognition or other areas where access to a large amount of text is helpful, please contact us. We encourage the use of public domain materials for these purposes and may be able to help.

+ *Maintain attribution* The Google "watermark" you see on each file is essential for informing people about this project and helping them find additional materials through Google Book Search. Please do not remove it.

+ *Keep it legal* Whatever your use, remember that you are responsible for ensuring that what you are doing is legal. Do not assume that just because we believe a book is in the public domain for users in the United States, that the work is also in the public domain for users in other countries. Whether a book is still in copyright varies from country to country, and we can't offer guidance on whether any specific use of any specific book is allowed. Please do not assume that a book's appearance in Google Book Search means it can be used in any manner anywhere in the world. Copyright infringement liability can be quite severe.

**About Google Book Search**

Google's mission is to organize the world's information and to make it universally accessible and useful. Google Book Search helps readers discover the world's books while helping authors and publishers reach new audiences. You can search through the full text of this book on the web at http://books.google.com/

1866

D. 12.

# THE TAMIL TEXT BOOK

## FOR THE B. A. EXAMINATION 1879,

CONTAINING THE PRESCRIBED PORTION OF

RAMAYANAM AND KURAL

PUBLISHED BY

P. LUTCHMANA ROW,

*Tamil Pundit, Free Church Mission Institution Madras;*

AND PUPIL OF

C. RAJAGOPAUL PILLAY

*Tamil Pundit, Presidency College, Madras.*

MADRAS:

PRINTED AT THE VURTHAMANATHARANGINI PRESS.

1877.

*Price one Rupee.*

ஸ்ரீ

## ஊர்தேடுபடலம் - ௪௧ - ஆம் திருவிருத்தம்.

(இ-ள்.) அம் - அழகமைந்த; சுவணத்தின் ஆடைஉடுத்தாள் - பொன்னாலாக்கப்பட்ட ஆடையையுடுத்தவள்; அரவு எல்லாம் அஞ்ச - எல்லாப்பாம்புகளும் அஞ்சுகின்ற; உவணத்தின் வேகமிகுத்தாள் - கருடனைப்போல நடைவேகமிகுந்தவள்; அருள் இல்லாள் - கருணையில்லாதவள், அஞ்சுவண்ணத்தின் - பஞ்சவர்ணமாகிய; உத்தரியத்தாள் - மேற்போர்வையுடையவள்; அலை ஆரும் - கடலில்நிறைந்துள்ள; அம் - நீரில் வசிக்கும், சு - நல்ல; வள் நத்தின் - பருத்தசங்கினது; முத்து - முத்துகளால் கோக்கப்பட்ட, ஒளிர் ஆரத்து அணி கொண்டாள் - ஒளிர்கின்ற வடமாகிய அணியைத்தரித்தவள் - எ-று.

அலை தொழி லடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; அலை பகுதி, வினைமுதற்பொருண்மை விகுதியாகிய இகரம்புணர்ந்து கெட்டது; இது சினையாகு பெயராய்க் கடலையுணர்த்திற்று. அலையாருமென்பதற்கு; அல்லையாரும் - இருளையில்லாமற் செய்யும் எனவுரைத்தலுமாம். ஆர்தல் - உண்ணுதல். ஆருமென்னும் காரியப்பொருட்டாகிய பெயரெச்சம் முத்தென்னும் வினைமுதற்பெயர் கொண்டது. வணத்தின் என்பவற்றில் ணகரங்களும்; அலை யென்பதில் லகரமும் தொகுக்கப்பட்டன. வண்ணம் ஐந்தாவன. வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை யென்பன.

ஹரி:ஓம்.



நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயணம்.

## ௫-ஆவது-சுந்தரகாண்டம்.

### முதலாவது-கடறாவுபடலம்.

தனியன்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மெய்ச்சிட்டர்பொதுநோக்கிற் சீர்தூக்கிக்கம்பனெனு மேதக்கோன்றன்
உச்சிட்டமுலகிலுள கசடறக்கற்றுயர்புலவ ருஞற்றியாப்பில்
வைச்சிட்டசொற்பொருளைக் கனிமுதலவென்பர்தனி மைதிலிக்கு
விச்சிட்டமணவாளன் புகழெனின்மற்றிதன்றகைமை விளம்பற்பாற்றோ

காப்பு.

வேறு.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மை யரவெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டின் வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டா லவரென்பர்கைவிலேந்தி
இலங்கையிற்பொருதாரன்றே மறைகளுக்கிறுதியாவார் (௧)

## நூல்.

ஆண்டகையாண்டவ்வாறேர் துறக்கநாடருகர்கண்டான்
ஈண்டி தான்கொல்வேலை யிலங்கையென்றையமெய்தீர்
வேண்டருவின்னுடைன்னு மெய்ம்மைகள்டுள்ளபீட்டான்
காண்டருதோகையும்ப ரில்லெனக்கருத்துங்கொண்டான். (௨)

கண்டனனிலங்கைமூதூர்க் கடிபொழிற்கனகநாஞ்சில்
மண்டிலமதிலுங்கொற்ற வாயிலுமணியிற்செய்த
வெண்டளக்கனகமாட வீதியும்பிறவுமெல்லாம்
அண்டமுந்திசைகளெட்டு நடுங்கத்தோள்கொட்டியார்த்தான். (௩)

வன்றந்தவரிகொணாகம் வயங்கனலுமிழும்வாய
பொன்றந்தமுழைகடோறும் புறத்துராய்ப்புரண்டுபோவ
நின்றந்தமில்லானூன்ற நெரிந்துகீழழுந்திநீலக்
குன்றந்தன்வயிறுகீறிப் பிதுங்கினகுடர்களொமான். (௪)

புகலருமுழையுட்டுஞ்சும் பொங்குளைச்சீயம்பொன்றி
உகலருங்குருதிகக்கி யுள்ளுறநெரிந்தலூழின்
அகலிரும்பரவைநாண வரற்றுவதூரலவர்கிப்
பகலொளிகரப்பவானை மறைத்தனபறவையெல்லாம். (௫)

மொய்யுறுசெவிகடாவி முதகுறமுறைகாறனள
மையுறுவிசும்பினூடு நிமிர்ந்தவாலதியமஞ்சின்
மெய்யுறத்தழீஇயமெல்லென் பிடியொடும்வெருவலோடும்
கையுறமரங்கள்சுற்றிப் பிளிறினகளிநல்யானை. (௬)

பொன்பிறழ்சிமயக்கோடு பொடியுறப்பொறியுஞ்சிந்த
மின்பிறழ்குடுமிக்குன்றம் வெரிநுறவிரியும்வேலை
புன்புறமயிரும்பூவாக் கட்புலம்புறத்துநாலு
வன்பறழ்வாயிற்கவ்வி வல்லியமிரிந்தமாதோ. (௭)

தேக்குறுசிகரக்குன்றந் திரிந்துமெய்ந்நெரிந்துசிந்தத்
தூக்குறுதோலர்வாளர் துரிதத்தினெழுந்ததோற்றம்
தாக்குறுசெருவினோரார் தாளறவீசத்தாவி
மேக்குறவிசைத்தாரென்னப் பொலிந்தனர்விஞ்சைவேந்தர் (௮)

தாரதைசுடர்கண்மேக மென்றிவைதவிரத்தாழ்ந்து
பாரிடையழுந்துகின்ற படர்நெடும்பனிமாக்குன்றம்
கூருகிர்க்குவவுத்தோளான் கூம்பெனக்குமிழிபொங்க
ஆர்கலியழுவத்தாழுங் கலமெனலாயிற்றன்றே. (௯)

தாதுகுநறுமென்சந்தங் குங்குமங்குலிக்தண்ணென்
போதுகுபொலந்தாதென்றித் தொடக்கத்தயாவும்பூசி
மீதுறுசுனைநீராடி யருவியொடிலகின்வீழ்வ
ஓதியகுன்றங்கிண்டு குருதிநீர்சொரிந்தாலொத்த. (௰)

கடலுறுமத்திதென்னக் கருவரைதிரியுங்காலை
மிடலுறுபுலன்கள்வென்ற மெய்த்தவர்விசும்பினுற்றார்
திடலுறுகிரியிற்றாந்தஞ் செய்வினைமுற்றிமுற்றா
அடலுறுபாசம்வீசா தும்பர்செல்வாருமொத்தார். (௧௧)

வெயிலியற்குன்றங்கீண்டு வெடித்தலுமடுக்கமெய்தி
மயிலியற்றேவிமார்க டழீஇக்கொளப்பொலிந்தவானோர்
அயிலெயிற்றரக்கனள்ளத் திரிந்தநாளணங்குபுல்லக்
கயிலையினிருந்ததேவைத் தனித்தனிக்கடுத்தல்செய்தார். (௧௨)

ஊறியநறவுமுற்ற குற்றமுமுணர்வையுண்ணச்
சீறியமனத்தர்தெய்வ மடந்தையரூடறீர்வுற்
றாறினரஞ்சுகின்றா ரன்பரைத்தழுவியும்பர்
ஏறினரிட்டுநீத்த பைங்கிளிக்கிரங்குகின்றார். (௧௩)

இத்திறநிகழும்வேலை யிமையவர்முனிவர்மற்றை
முத்திறத்துலகத்தாரு முறைமுறைவிரைவின்மொய்த்தார்
தொத்துறுமலருஞ்சாந்துஞ் சுண்ணமுமணியுந்தூவி
வித்தகசென்றீயென்றார் வீரனும்விரைவதானான். (௧௪)

குறுமுனிகுடித்தவேலை குப்புறுங்கொள்கைத்தாதல்
வெறுவிதுவிசயம்வைகும் விலங்கற்றோளலங்கல்வீர
சிறுவிதென்றிகழற்பாலை யல்லைநீசேறியென்னா
உறுவலித்துணைவர்சொன்னா ரொருப்பட்டான் பொருப்பையொப்பான். (௧௫)

இலங்கையினளவிற்றன்றா லிவ்வுருவெடுத்ததோற்றம்
விலங்கவுமுளதன்றென்று விண்ணவர்வியந்துநோக்க
அலங்கறாழ்மார்பன்முன்றாழ்ந் தடித்துணையழுத்தலோடும்
பொலங்கெழுமலையுந்தாளும் பூதலம்புக்கமாதோ. (௧௬)

வால்விசைத்தெடுத்துவன்றாண் மடக்கிமார்பொடுக்கிமானத்
தோள்விசைத்துணைகள்பொங்கக் கழுத்தினைச்சுருக்கித்துண்டம்
கால்விசைத்தடக்கைநீட்டிக் கட்புலங்கதுவாவண்ணம்
மேல்விசைத்தெழுந்தானுச்சி விரிஞ்சனாடுரிஞ்சவீரன். (௧௭)

ஆயவனெழுதலோடு மரும்பணைமரங்கடாமும்
வேயுயர்குன்றும்வென்றி வேழமும்பிறவுமெல்லாம்
நாயகன்பணியீதென்னா நளிர்கடலிலங்கைதாழும்
பாய்வனவென்னவானம் படர்ந்தனவெழுவமான. (௧௮)

இசையுடையண்ணல்சென்ற வேகத்தாலெழுந்தகுன்றம்
பசையுடைமரனுமாவும் பல்லுயிர்க்குலமும்வல்லே
திசையுறச்சென்றுசென்று செறிகடலிலங்கைசேரும்
விசையிலவாகத்தள்ளி வீழ்ந்தனவென்னவீழ்ந்த. (௧௯)

மாவொடுமரனுங்கல்லும் வல்லியும்யாவுமற்றும்
போவதுபுரிந்தவீரன் விசையினாற்புணரிபொங்கத்
தூவினகீழுமேலுந் தூர்த்தனசுருதியன்ன
சேவகன்சிருமுன்னஞ் சேதுவுந்தெரிந்தமாதோ. (௨௰)

கீண்டதுவேலைநன்னீர் கீழுறக்கிடந்தநாகர்
வேண்டியவுலகமெங்கும் வெளிப்படமணிகண்மின்ன
ஆண்டகையதனைநோக்கி யிரவினுக்கரசர்வாழ்வும்
காண்டகுதவத்தனானேன் யானெனக்கருத்துட்கொண்டான். (௨௧)

வெய்தின்வான்சிறையினானீர் வேலையைக்கிழியவீசி
நொய்தினாரமுதங்கொண்ட நோன்மையேநுவலுநாகர்
உய்துநாமென்பதென்னே யுறுவலிக்கலுழனாழின்
எய்தினனென்றஞ்சி மறுக்கமுற்றிரியல்போனார். (௨௨)

துள்ளியமகரமீன்க டுடிப்பறச்சுறவுதூங்க
ஒள்ளியபனைமீன்றஞ்சுந் திவலையவூழிக்காலின்
வள்ளுகிர்வீரன்செல்லும் விசைபொருமறுகிவாரி
தள்ளியதிரைகண்முந்துற் றிலங்கைமேற்றவழ்ந்தமாதோ. (௨௩)

இடுக்குறுபொருள்களென்று மெண்டிசைசுமந்தயானை
நடுக்குறவிசையிற்செல்லு நாயகன்றூதனாகம்
எடுக்குறுகாலவன்காற் றிடியொடுமொடியவந்நாள்
முடுக்குறக்கடலிற்செல்லு முத்தலைக்கிரியுமொத்தான். (௨௪)

கொட்புறுபுரவித்தெய்வக் கூர்நுதிக்குலிசத்தாற்கும்
கட்புலங்கதுவலாகா வேகத்தாற்கடலுமண்ணும்
உட்பதங்கூட்டியண்ட முறவுளசெலவினாற்றைப்
புட்பகவிமானந்தானவ் விலங்கைமேற்போவதொத்த. (௨௫)

விண்ணவரோத்தவேத முனிவரர்வியந்துவாழ்த்த
மண்ணவரிறைஞ்சச்செல்லு மாருதிமறமுட்கூர
அண்ணல்வாளரக்கன்றன்னை யமுக்குவாமின்னமென்னாக்
கண்ணுதலொழியச்செல்லுங் கைலையங்கிரியுமொத்தான். (௨௬)

மாணியாம்வேடந்தாங்கி மலரயற்கறிவுமாண்டோர்
ஆணியாயுலகுக்கெல்லா மறம்பொருணிரப்புமண்ணல்
சேணுயர்நெடுநாடீர்ந்த திரிதலைச்சிறுவன்றன்னைக்
காணியவிரைவிற்செல்லுங் கனகமால்வரையுமொத்தான். (௨௭)

மழைகிழித்துதிரமீன்கண் மறிகடல்பாயவானம்
குழைவுறத்திசைகள்கீற மேருவுங்குலுங்கக்கோட்டின்
முழையுடைக்கிரிகண்முற்ற முடுக்குவான்முடிவுக்காலத்
தழிவுறக்கடுக்கும்வேகத் தாதையுமனையனானான். (௨௮)

தடக்கைநாலைந்தும்பத்துத் தலைகளுமுடையான்றானே
அடக்கியைம்புலன்கள்வென்ற தவப்பயனாதலோடும்
கெடக்குறியாகமாகங் கிழக்கெழுவழக்குநீங்கி
வடக்கெழுந்திலங்கைசெல்லும் பரிதிவானவனுமொத்தான். (உ௯)

புறத்துறலஞ்சிவேறோ ரரணம்புக்குறைதல்போக்கி
மறத்தொழிலரக்கர்வாழு மாநகர்மனுவின்வந்த
திறத்தகையிராமனென்னுஞ் சேவகற்பற்றிச்செல்லும்
அறத்தகையரசன்றின்போ ராழியுமனையனானான். (௩௦)

கேழுலாமுழுநிலாவிற் கிளரொளியிருளைக்கீறப்
பாழிமாமேருகாண விசும்புறப்படர்ந்ததோளான்
ஆழிசூழுலகமெல்லா மருங்கனன்முருங்கவுண்ணும்
ஊழிநாள்வடபாற்றோன்று மூவாமுழுமதியுமொத்தான். (௩௧)

அடலெலாந்திகிரிமாயற் கமைந்தனனாற்றல்காட்டக்
குடலெலாமவுணர்சிந்தக் குன்றெனக்குறித்துநின்ற
திடலெலாந்தொடர்ந்துசெல்லச் சேண்விசும்போதுங்கத்தெய்வக்
கடலெலாங்கலங்கத்தாவுங் கலுழனுமனையனானான். (௩௨)

நாலினோடுலகமூன்று நடுக்குறவடுக்கிநாகர்
மேலின்மேனின்றகாறுஞ் சென்றகூலத்தின்விண்டு
காலினாலளந்தவான முகட்டையுங்கடக்கக்கால
வாலினாலளந்தானென்று வானவர்மருளச்சென்றான். (௩௩)

விளித்துப்பின்வேலைதாவும் வீரன்வால்வேதமெய்க்கும்
அளித்துப்பினருமனென்னு மறந்துணைபெற்றதாயும்
களித்துப்புன்றொழின்மேனின்ற வரக்கர்கண்ணுறுவராமென்
றொளித்துப்பின்செல்லுங்கால பாசத்தையொத்ததன்றே. (௩௪)

மேருவைமுழுதஞ்சூழ்ந்து மீதுற்றவேகநாகம்
கார்நிறத்தண்ணலேவக் கலுழன்வந்துற்றகாலை
சோர்வுறுமனத்ததாகிச் சுற்றியசுற்றுநீங்கிப்
பேர்வுறுகின்றவாறு மொத்ததப்பிறங்குபேர்வால். (௩௫)

குன்றொடுகுணிக்குங்கொற்றக் குவவுத்தோட்குரக்குச்சீயம்
சென்றுறுவேகத்திண்கா லெறிதரத்தேவர்வைகும்
மின்றொடர்வானத்தான விமானங்கள்விசையிற்றம்மின்
ஒன்றொடொன்றுடையத்தாக்கி மாக்கடலுற்றமாதோ. (௩௬)

வலங்கையின்வயிரவேதி வைத்தவன்வைகுநாடும்
கலங்குவதேகுவான்றன் கருத்தென்கொலென்னுங்கற்பான்
விலங்கயிலெயிற்றுவீரன் மூடுக்கியவேகம்வெய்யோர்
இலங்கையினளவன்றென்ன விம்பர்நாடிரிந்ததிப்பால். (௩௭)

ஓசனையுலப்பிலாத வுடம்பமைந்துடையவென்னத்
தேசமுநாலுஞ்சொல்லுந் திமிங்கிலகிலங்களோடும்
ஆசையையுற்றவேலை கலங்கவன்றண்ணல்யாக்கை
வீசியகாலின்வீந்து மிதந்தனமீன்களெல்லாம். (௧௮)

பொருவருமுருவத்தன்னான் போகின்றபொழுதுவேகம்
தருவனதடக்கைதள்ளா நிமிர்ச்சியதம்முளொப்ப
ஒருவருங்குணத்துவள்ள லோருயிர்த்தம்பியோடும்
இருவருமுன்னர்ச்சென்று லொத்தவவ்விரண்டுபோலும், (௧௯)

கலித்துறை.

இந்நாகமன்னானெதிகாலெனவேகும்வேலை
இந்நாகமாவிற்செறிகீட்டிசைக்காவல்செய்யும்
மைந்நாகமந்நாள்கடல்வந்ததொர்காட்சிதோன்ற
மைந்நாகமென்னுமலைவானுறவந்ததன்றே. (௨௰)

மீயோங்குசெம்பொன்முடியாயிரமின்னிமைப்ப
ஓயாவருவித்திரளுத்தரியத்தையொத்த
தீயோருளராகியதாலவர்தீமைதீர்ப்பான்
மாயோன்மகரக்கடனின்றெழுமாண்பதாகி. (௨௧)

நூலேந்துகேள்விநுகராப்புலனோக்கலுற்றார்
போலேந்துநின்றதனியாண்மெய்பொருதுநீங்கக்
காலாழ்ந்தழுந்திக்கடல்புக்குழிஇக்கச்சமாகி
மாலேந்தவோங்குநெடுமந்தரமேயுமான. (௨௨)

தள்ளற்கருநற்சிறைமாடுதழைப்பொடோங்க
எள்ளற்கருநன்னிறமெல்லையிலாதபுல்ல
வள்ளற்கடலைக்கெடநீக்கிமருந்துவவ்வி
உள்ளூற்றெழுமோருவணத்தரசேயுமொத்த. (௨௩)

ஆன்றுநெடுநீரிடையாதியொடந்தமாகித்
தோன்றுதனின்றனருடோன்றிடமுந்துதோன்று
மூன்றுமுலகத்திடைமுற்றுயிராயமற்றும்
ஈன்றானையீன்றசுவணத்தனியண்டமென்ன. (௨௪)

இந்நீரினென்னைத்தருமெந்தையையெய்தியன்றிச்
செந்நீர்மைசெய்யேனெனச்சிந்தனைசெய்துநொய்தின்
அந்நீரில்வந்துமுதலந்தணனாதிநாளம்
முந்நீரின்மூழ்கித்தவமுற்றிமுளைத்தவாபோல். (௨௫)

பூவாலிடையூறுபுகுந்தபொருதநெஞ்சின்
கோவாமுனிசீறிடவாரிகுளித்தவெல்லாம்
மூவாமுதனாயகன்மீளமுயன்றவந்நாள்
தேவாசுரர்வேலையில்வந்தெழுதிங்களென்ன. (௨௬)

நிறங்குங்குமமொப்பனநீணிறம்வாய்த்தநீரின்
இறங்கும்பவளக்கொடிசுற்றினசெம்பொனேய்ந்த
பிறங்குஞ்சிகரப்படர்முன்றிறெறும்பிணுவோ
டுறங்கும்மகரங்களுயிர்ப்பொடுணர்ந்துலாவ. (௧௭)

கூன்கூன்முதிரிப்பிகுளாக்கனிரைத்தபாசி
வான்சூழ்மழையொப்பவயங்குபனிங்குமுன்றி
முன்கூலநாளிற்றகைமுத்தமுயிர்த்தசங்கம்
மீன்சூழ்வருமம்முழுவெண்மதிவீறுகீற. (௧௮)

பல்லாயிரமாயிரங்காசினம்பாடிமைக்கும்
கல்லார்சிமயத்தடங்கைத்தலநீண்டுகொட்டத்
தொல்லார்கவியுட்புகழ்ந்கிவயங்குதோற்றத்
தெல்லாமணியீட்டமுகந்தெழுகின்றதென்ன. (௧௯)

மலையிற்பொலிமாகநெடுங்கொடிமாலையேய்ப்ப
விலையிற்றிரள்வெள்ளருவித்திரணீங்கிவீழ
நிலையிற்கடலூடெழுலோடுமுணர்ந்துநீங்காச்
சுனையிற்பனைமீன்றியிலோடுதொடர்ந்துதுள்ள. (௨௦)

கொடுநாலொடிரண்டுகுலப்பகைகுற்றமூன்றும்
சுடுஞானம்வெளிப்படவுய்த்ததுயக்கிலார்போல்
விடநாகமுழைத்தலைவிம்மதுழன்றுநீங்க
நெடுநாள்பொறையுற்றவுயிர்ப்புநிமிர்ந்துநிற்ப. (௨௧)

எழுந்தோங்கிவிண்ணுடுமண்ணுக்கவிலங்குமாடி
உழுந்தோடுகாலத்திடையும்பரிணிம்பபொங்கும்
கொழுந்தோடிநின்றகொழுங்குன்றையியந்துநோக்கி
அழுங்காமனத்தண்ணலிதென்கொலெனுவயிர்த்தான். (௨௨)

நீர்மேற்படராநெடுங்குன்றுநிமிர்ந்துநிற்றல்
சீர்மேற்படராதெனச்சிந்தையுணர்ந்துசெல்வான்
வேர்மேற்படவன்றலைகீழ்ப்படநூக்கிவின்னோர்
ஊர்மேற்படரக்கடிதும்பரின்மீதுயர்ந்தான். (௨௩)

உந்தாமுனலைந்துயிர்வேலையொளித்தகுன்றும்
சிந்தாகுலமுற்றதுபின்னருந்தீர்விலன்பால்
வந்தோங்கியாண்டோர்சிறுமானுடவேடமாகி
எந்தாயிதுகேளெனவின்னவிசைத்ததன்றே. (௨௪)

வேற்றுப்புலத்தோனெனலையவிலங்கலெல்லாம்
மாற்றுச்சிறையென்றரிவச்சிரமாணவோச்ச
வீற்றுப்படநூறியவேலையின்வேலையுய்த்துக்
காற்றுக்கிறைவனெனைக்காத்தனனன்புகாக்க. (௨௫)

அன்னானருங்காதலனாதலினன்புதூண்ட
என்றானுனக்கீண்டுச்செயற்கரிதாயதின்மை
பொன்னார்சிகரத்திடையாறினைபோதியேனும்
உன்னாலுயர்ந்தேனுயர்விற்குமுயர்ந்ததோளாய். (௫௬)

கார்மேகவண்ணன்பணிபூண்டருங்காலின்மைந்தன்
தேர்வான்வருகின்றதுசீதையைத்தேவருய்யப்
பேர்வானயல்சேறியிதிற்பெறும்பேறிலென்ன
சீர்வேலையுமென்னையுரைத்ததுநீதிநின்றாய். (௫௭)

நற்றாயினுநல்லனெனக்கிவனென்றுநாடி
இற்றேயிறையெய்தினையேய்ந்ததுகோடியென்னால்
பொற்றாரகன்மார்பதம்மில்லுழைவந்தபோதே
உற்றார்செயன்மற்றுமுண்டோவெனவுற்றுரைத்தான் (௫௮)

உலாத்தானுரையாலிவனூறிலனென்பதுன்னி
விரைத்தாமரைவாண்முகம்விட்டுவிளங்குவீரன்
சிரித்தானளவேசிரித்துத்திசைசெல்லநோக்க
வரைத்தாணெடும்பொற்குடுமித்தலைமாடுகண்டான். (௫௯)

வருந்தேனதுவென்றுனைவானவன்வைத்தகாதல்
அருந்தேனினியாதுமென்னாசைநிரப்பினல்லால்
பெருந்தேன்பொழிசாரனின்னன்புபிணித்தபோதே
இருந்தேனுகர்ந்தேனிதினூஉங்கினியீவதுண்டே. (௬௦)

முன்பிற்சிறந்தாரிடையுள்ளவர்காதன்முற்றப்
பின்பிற்சிறந்தார்குணநன்றிதுபெற்றயாக்கைக்
கென்பிற்சிறந்தாயதொரூற்றமுண்டென்னலாமே
அன்பிற்சிறந்தாயதொர்பூசனையார்கணுண்டே. (௬௧)

ஈண்டியான்கடிதேகியிலங்கைவிலங்கலெய்தி
ஆண்டானடிமைத்தொழிலாற்றலினாற்றலுண்டேல்
மீண்டியானுகர்வென்னல்விருந்தெனவேண்டிமெய்ம்மை
பூண்டானவன்கட்புலம்பிற்படமுந்துபோனான். (௬௨)

செவ்வான்கதிருங்குளிர்திங்களுந்தேவர்வைகும்
வெவ்வேறுவிமானமுமீனொடுமேகமற்றும்
எவ்வாயுலகத்தவுமீண்டியிருந்ததம்மின்
ஒவ்வாதனவொத்திடவூழிவெங்காலுமொத்தான். (௬௩)

நீர்மாக்கடன்மேனிமிர்கின்றநிமிர்ச்சிநோக்காப்
பார்மேற்றவழ்சேவடிபாய்நடவாப்பதத்தே
தேர்மேற்குதிகொண்டவனித்திறன்சிந்தைசெய்தான்
ஆர்மேற்கொலென்றெண்ணியருக்கனுமையமுற்றான். (௬௪)

வாளொத்தொளிர்வாலெயிறாழின்மருங்கிமைப்ப
மீளொத்துயர்வாலின்விசும்புநிரம்புமெய்யன்
கோளொத்தவன்மேனிவிசும்பிருகூறுசெய்த
நாளொத்ததுமேலொளிகீழிருளுற்றஞாலம். (சுரு)

மூன்றுற்றதலத்திடை முற்றியதுன்பம்வீப்பான்
ஏன்றுற்றுவந்தான்வலி மெய்ம்மையுணர்த்துநீயென்
றான்றுற்றவானோர் குறைநேரவரக்கியாகித்
தோன்றுற்றுநின்றாள் சுரசைப்பெயர்ச்சிந்தைதூயாள். (சுசு)

பேழ்வாயொரரக்கி யுருக்கொடுபெட்பினோங்கிக்
கோழ்வாயரியின் குலத்தாய்கொடுங்கூற்றுமுட்க
வாழ்வாயெனக்கா மிடமாய்வருவாய்கொலென்று
நீழ்வாய்விசும்பின் றனதுச்சிநெருங்கிநின்றாள். (சுஎ)

தீயேயெனலாய பசிப்பிணிதீர்த்தல்செய்வாய்
ஆயேவிரைவுற் றெனையண்மினைவண்மையாள
நீயேயினிவந்தெனி ணங்கொள்பிணங்கெயிற்றின்
வாயேபுகுவாய் வழிமற்றிலைவானினென்றாள். (சுஅ)

பெண்பாலொருநீபசிப் பீழையொறுக்கநொந்தாய்
உண்பாயெனதாக்கையை யானுதவற்குநேர்வல்
விண்பாலவர்நாயகனேவ லிழைத்துமீண்டால்
நண்பாலெனச்சொல்லிய நல்லறிவாளனக்கான். (சுகூ)

காய்ந்தேழுலகங்களுங் காணநின்யாக்கைதன்னை
ஆய்ந்தேபசிதீர்வெனின் றனையென்றன்னள்சொன்னாள்
ஓர்ந்தானுமிகழ்ந்தொரு வேனினதூழில்பேழ்வாய்
சேர்ந்தேகுகின்றேன்வலை யாமெனிற்றின்னியென்றான்- (எ0)

அக்காலையரக்கியுமண்டமநந்தமாகப்
புக்கானிறையாதபுழைப்பெருவாய்திறந்து
விக்காதுவிழுங்கநின்றாளதுநோக்கிவீரன்.
இக்காரவள்வாய்சிறிதாம்வகைசேணினீண்டான். (எக)

நீண்டானுடனேசுருங்காநிமிர்வாள்வயிற்றின்
ஊண்டானெனவுற்றொருயிர்ப்புயிராதமுன்னர்
மீண்டானதுகண்டனர்விண்ணுறைவோர்களெம்மை
ஆண்டான்வலனென்றலர்தூஉய்நெடிதாசிசொற்றார். (எஉ)

மின்மேற்படர்நோன்மையனாயுடல்வீங்கிநீங்கத்
தன்மேனியளாயவடாயினுமன்புதாழ
என்மேன்முடியாதனவென்றினிதேத்திநின்றாள்
பொன்மேனியனுநெடிதாசிபுனைந்துபோனான். (எங)

கீதங்களிசைத்தனர்கின்னரர்கீதமின்ற
பேதங்களியம்பினர்பேதையராடல்பின்னர்ப்
பூதங்கடொடர்ந்துபுகழ்ந்தனபூசுரோசர்
வேதங்களியம்பினர்தென்றல்விருந்துசெய்த. (௭௪)

மந்தாரமுந்துமகரந்தமணந்தவாடை
செந்தாமரைவாண்முகத்திற்செறிவேர்சிதைப்பத்
தந்தாமுலகத்திடைவிஞ்சையர்பாணிதள்ளும்
கந்தாரவீணைக்களிசெஞ்செவிக்காதுறங்க. (௭௫)

### கலிவிருத்தம்.

வெங்கார்நிறப்புணரிவேறேயுமொன்றைப்
பொங்கார்கலிப்புனறரப்பொலிவதேபோல்
இங்கார்கடத்திரெனவென்னாவெழுந்தாள்
அங்காரதாரைபெரிதாலாலமன்னாள். (௭௬)

சாதக்கடுங்குறிகணக்கிறுதிகண்ணாள்
பாதச்சிலம்பினொலிவேலையொலிபம்ப
வேதக்கொழுஞ்சுடரைநாடிநெறிமேனாள்
ஓதத்தின்மேவுமதுகைடவரையொத்தாள். (௭௭)

துண்டப்பிறைத்துணையெனச்சுடரெயிற்றாள்
கண்டத்திடைக்கறையுடைக்கடவுள்கைம்மா
முண்டத்துரித்தவுரியாண்முளரிவந்தான்
அண்டத்தினுக்குறையமைத்தபிலவாயாள் (௭௮)

நின்றாணிமிர்ந்தலைநெடுங்கடலினீர்தன்
வன்றாளலம்பமுடிவான்முகடுவவ்வ
அன்றாய்திறத்தவனறத்தையருளோடும்
தின்றாளொருத்தியிவளென்பதுதெரிந்தான். (௭௯)

பேழ்வாயகத்தலதுபேருலகமூடும்
நீழ்வானகத்தினிடையேகுநெறிநேரா
வாழ்வானனுக்கனவளாழ்பிலவயிற்றைப்
போழ்வானினைத்தினையவாய்மொழிபுகன்றான். (௮௦)

சாயாவரந்தழுவினாய்தழியபின்னும்
ஓயாதுவந்தவிசைகண்டுணரகில்லாய்
வாயாலளந்துநெடுவான்வழியடைத்தாய்
நீயாரையென்னையிவணின்றநிலையென்றான். (௮௧)

பெண்பாலெனக்கருதுபெற்றியொழியுற்றால்
விண்பாலவர்க்குமுயிர்வீடுறுதன்மெய்யே
கண்பாலடுத்தவுயிர்காலன்வருமேனும்
உண்பானருத்தியதொழிப்பரியதென்றாள். (௮௨)

திறந்தாளெயிற்றையவளண்ணலிடைசென்றான்
அறந்தானரற்றியதயர்த்தமரரெய்த்தார்
இறந்தானெனக்கொடொரிமைப்பதனின்முன்னம்
பிறந்தானெனப்பெரியகோளரிபெயர்ந்தான். (௮௩)

கள்வாயரக்கிகதறக்குடர்கணத்தில்
கொள்வார்தடக்கையின்விசும்பைமிசைகொண்டான்
முள்வாழ்பொருப்பின்முழையெய்திமிகநொய்தின்
உள்வாளரக்கொடெழுதிண்கலுழனொத்தான். (௮௪)

சாகாவரத்தலைவரிற்றிலகமன்னான்
ஏகாவரக்கிகுடர்கொண்டெனெழுந்தான்
மாகாலசைப்பவடமண்ணினுறவாலோ
டாகாயமுற்றகதலிக்குவமையானான். (௮௫)

ஆர்த்தனர்கள்வானவர்கடானவரழுங்கா
வேர்த்தனர்விரிஞ்சனும்வியந்துமலர்வெள்ளம்
தூர்த்தனனகன்கைலையிற்றலைவிலோனும்
பார்த்தனன்முனித்தலைவராசிகள்பகர்ந்தார். (௮௬)

மாண்டாளரக்கியவள்வாய்வயிறுகாறும்
கீண்டானிமைப்பினிடைமேருகிரிகீழா
நீண்டான்வயக்கதிரினைப்பினெடிதென்னைப்
பூண்டானருக்கனுயர்வானின்வழிபோனான். (௮௭)

சொற்றார்கள்சொற்றதொகையல்லதுணையொன்றே
முற்றாமுடிந்தநெடுவானினிடைமுந்நீர்
இற்றாவியெற்றெனினும்யானினியிலங்கை
உற்றால்விலங்குமிடையூறெனவுணர்ந்தான். (௮௮)

ஊறுகடிதூறுவனவூறிலறமுன்னாத்
தேறிலியரக்கர்புரிதீமையவைதீர
வேறுவகையாண்டையவிராமனெனவெல்லாம்
மாறுமதின்மாறுபிறிதில்லெனவலித்தான். (௮௯)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

தசும்புடைக்கனகநாஞ்சிற் கடிமதிறரித்துநோக்கான்
அசும்புடைப்பிரசத்தெய்வக் கற்பகநாட்டையண்மி
விசும்பிடைச்செல்லும்வீரன் விலங்கிவேறிலங்கைமூதூர்ப்
பசுஞ்சுடர்ச்சோலைத்தாங்கோர் பவளமால்வரையிற்பாய்ந்தான் (௯௦)

மேக்குறச்செல்வோன்பாய விலங்கிநீரிலங்கைவெற்பு
நூக்குறத்தங்குமிங்குந் தள்ளுறநுடங்குநோன்மை
போக்கினுக்கிடையூறாகப் புயலொடுபொதிந்தவாடை
தாக்குறத்தளர்ந்துசிந்துங் கலமெனத்தக்கதன்றே. (௯௧)

மண்ணடியுற்றுமீது வானுறவரம்பின்றன்மை
எண்ணடியுற்றகுன்றத் தலத்துநின்றெய்தநோக்கி
விண்ணிடையுலகமென்னு மெல்லியன்மேனிநோக்கக்
கண்ணடிவைத்ததன்ன விலங்கையைத்தெரியக்கண்டான். (கஉ)

நன்னகரதனைநோக்கி நளினக்கைம்மறித்துநாகர்
பொன்னகரிதனையொக்கு மென்பதுபுல்லிதம்மா
அந்நகரிதனினன்றே யண்டத்தைமுழுதுமாள்வான்
இந்நகரிருந்துவாழ்வா னிதுவதற்கேதுவென்றான். (கங)

மாண்டதோர்நலத்திற்றுமென் றுணர்த்துதல்வாய்மைத்தன்றால்
வேண்டியவேண்டினெய்தி வெறுப்பின்றிவிழைந்தவுய்க்கும்
ஈண்டரும்போகவின்ப மீறிலதியாண்டுக்கண்டாம்
ஆண்டதுதுறக்கமஃதே யருமறைத்துணிவுமம்மா. (கச)

உட்புலனெழுநூறென்பர் யோசனையுலகமூன்றில்
தெட்புறுபொருள்களெல்லா மிதனுழைச்செறிந்தவென்றால்
நுட்புலனுணங்குகேள்வி நுழைவிலரெனினுநோக்கும்
கட்புலன்வரம்பிற்றுமே காட்சியுங்கரையிற்றுமே. (கரு)

கடறாவுபடலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம் - கரு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## உ - ஆவது ஊர்தேடுபடலம்.

### கலிவிருத்தம்.

பொன்கொண்டிழைத்துமணி யைக்கொடுபொதிந்த
மின்கொண்டமைத்தவெயி லைக்கொடுசமைத்த
என்கொண்டியற்றிய வெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டுமதி முட்டுவனமாடம். (க)

நாகாலயங்களொடு நாகருலகுந்தம்
பாகார்மருங்குதயில் வென்னவுயர்பண்ப
ஆகாயமஞ்சவகன் மேருவையனுக்கும்
மாகால்வழங்குசிறு தென்றல்வரநின்ற. (உ)

மாகாரின்மின்கொடி மடக்கினரடுக்கி
மீகாரமெங்கணு நறுந்துகள்விளக்கி
ஆகாயகங்கையினை யங்கையினளள்ளிப்
பாகாயசெஞ்சொலவர் வீசுபடுகாரம். (ங)

### கலிநிலைத்துறை.

பஞ்சியூட்டியபாட்டிசைக் கிண்கிணிப்பதுமச்
செஞ்செவிச்செழும் பவளத்தின்கொழுஞ்சுடர்சிதறி

மஞ்சினஞ்சன மிறமறைத்தரக்கியர்வடித்த
அஞ்சிலோதியொடுவமைய வவர்க்குறமுவமை. (ச)

நானநாண்மலர்க் கற்பகநறுவிரைநாறப்
பானம்வாயுற வெறுத்ததாளாறுடைப்பறவை
தேனவாவிரைச் செழுங்கழுநீர்த்துயில்செய்ய
வானயாறுதம் மரமியத்தலந்தொறுமடுத்த (ரு)

குழலும்வீணையும் யாழுமென்றிணையனகுழைய
மழலைமென்மொழி கிளிக்கிருந்தளிக்கின்றமகளிர்
சுழலுநன்னெடுந் தடமணிச்சுவர்தொறுந்துவன்று
நிழலுந்தம்மையு மெய்ம்மைநின்றறிவருநிலைய. (சு)

இனையமாடங்களிந்திரற்கமைவரவெடுத்த
மனையின்மாட்சிய வென்னினச்சொல்லுமாசுண்ணும்
அனையதாமெனி னரக்கர்தந்திருவுக்குமளவை
நினையலாமன்றி யுவமையுமன்னதாநிற்கும். (எ)

மணிகளெத்துணைப் பெரியவுமாறிருமார்பின்
அணியுங்காசினுக் ககன்றனவுளவெனலரிதால்
திணியுநன்னகர்த் திருமனைதெய்வமாத்தச்சன்
துணிவின்வந்தனன் றெட்டழகிழைத்தவத்தொழில்கள். (அ)

வாழுமன்னுயிர் யாவையுமொருவழிவாழ
ஊழிநாயகன் றிருவயிறொத்துளதிவ்வூர்
ஆழியண்டத்தி னருக்கன்றனலங்குதேர்ப்புரவி
ஏழுமல்லன வீண்டுளகுதிரையுமெல்லாம். (கூ)

மரமடங்கலுங் கற்பகமனையெலாங்கனகம்
அரமடந்தையர் சிலதியரரக்கியர்க்கமரர்
உரமடங்கிவந் துழையராயுழல்பவரொருவர்
தரமடங்குவதன்றிது தவஞ்செய்ததவமால். (க0)

போரியைந்தனதோற்றவென் றிகழ்தலிற்புறம்போய்
நேரியன்றவன் றிசைதொறுநின்றமாநிற்க
ஆரியந்தனியைங்கரக் களிறுமோராழிச்
சூரியன்றனித் தேருமேயிந்நகர்தொகாத. (கக)

தேவரென்பவர் யாருமித்திருநகர்க்கிறைவற்
கேவல்செய்கிலா ரேவரேயென்வகையுருவின்
மூவர்தம்மினு மதிகனென்றுலவன்முயலும்
தாவின்மாதவ மல்லதுபிறிதொன்றுதருமோ. (கஉ)

தழங்குபேரியி னூர்கலிதகைநெடுங்களிறு
முழங்குமோதையிம் மூரிநீர்முழக்கொடுமுழங்கும்

கொழுங்குழற்புதக் குதலையர்நூபுரக்குரலின்
வழங்குமப்பெருந் தழனிகள்வயின்றெழுமறையும். (கங)

மரகதத்தினு மற்றுளமணியினும்வனைந்த
குரகதத்தடந் தேரினமவைபயில்கொட்டில்
இரவிவெள்கநின் றிமைக்கின்றவியற்கையவென்றால்
நரகமொக்குமா னன்னெடுந்துறக்கமிந்நகர்க்கு. (கச)

திருகுறுஞ்சினத் தரக்கருங்கருநிறந்தீர்ந்தார்
அருகுபோகின்ற திங்களுமறுவற்றதழகைப்
பருகுமிந்நகர்த் தன்னொளிபாய்தலிற்பசும்பொன்
உருகுகின்றது போன்றுளதல்குருமுழுவரி. (கரு)

அண்டமுற்றவும் வீங்கிருளகற்றுகின்றலரி
கண்டவாற்றினிக் கடிநகர்நெடுமனைக்கதிர்கள்
உண்டவாற்றினுன் றுளைப்பரிதொப்பிடிற்றன்முன்
விண்டவாய்ச்சிறு மின்மினியென்னவும்விளங்கா. (கசு)

தேனுஞ்சாந்தமு மான்மதஞ்செறிநறுஞ்சேறும்
வானநாண்மலர்க் கற்பகமலர்களும்வயமாத்
தானவாரியு நீரொழுமெடுத்தலிற்றழீஇய
மீனுந்தானுமோர் வெறிமணங்கமழுமாம்வேலை. (கஎ)

தெய்வத்தச்சனைப் புகழ்துமோசெங்கண்வாளரக்கன்
மெய்யொத்தாற்றிய தவத்தையேவியத்துமோவிரிஞ்சன்
ஐயப்பாடிலா வரத்தையேமதித்துமோவறியாத்
தொய்யற்சிந்தையாம் யாவனையாதென்றுதுதிப்பாம். (கஅ)

வேறு.

வானும்நிலனும் பெறுமாரினிமற்றுமுண்டோ
கானும்பொழிலும் மிவைசெங்கனகத்தினாலும்
ஏனும்மணியாலு மியற்றியவேனும்யாவும்
தேனும்மலருங் கனியுந்தரச்செய்தசெய்கை. (கக)

வேறு.

நீரும்வையமு நெருப்புமேனிமிர்நெடுங்காலும்
வாரிவானமும் வழங்கலவாகுந்தன்வளர்ச்சி
ஊரினிந்நெடுங் கோபுரத்துயர்ச்சிகண்டுணர்ந்தால்
மேருவெங்ஙனம் விளர்க்குமோமூழுமுற்றும்வெள்கி. (உ0)

முன்னம்யாவரு மிராவணன்முனியுமென்றெண்ணிப்
பொன்னின்மாநகர் மீச்செலான்கதிரொனப்புகல்வார்
கன்னியாளையி னொளியினிற்கண்ணழுக்குறுதல்
உன்னிநாடொறும் விலங்கினன்போதலையுணரா. (உக)

தீயசெய்குநர் தேவராலினையவர்சேரும்
வாயிலல்லதோர் வரம்பமைக்குவமெனமதியாக்
காயமென்னுமக் கணக்கறுபதத்தையுங்கடக்க
ஏயநன்மதிலிட்டனன் கையையெடுத்தான். (உஉ)

கறங்குகால்புகா கதிரவனொளிபுகாமறலி
மறம்புகாவினி வானவர்புகாரொன்கைவம்பே
திறம்புகாலத்துள் யாவையுஞ்சிதையினுஞ்சிதையா
அறம்புகாதிந்த வணிமதிட்கிடக்கைகின்றகத்தின். (உங)

கொண்டவான்றிரைக் குணாகடலிடையதாய்க்குடுமி
எண்டவாவிசும் பெட்டகின்றிமைக்கின்றவெழிலால்
பண்டைநாகணைப் பள்ளியானுந்தியிற்பயந்த
அண்டமேயுமொத் திருந்ததவ்வகனகரமைதி. (உச)

பாடுவார்பலரொன்னின் மற்றவரினும்பலரால்
ஆடுவார்கண்மற் றவரினும்பலருளரமைதி
கூடுவாரிடை யின்னியங்கொட்டுவார்முட்டில்
வீடுகாண்குறுந் தேவரால்விழாநடங்காண்பார். (உரு)

வானமாதரோ டிகலுவர்விஞ்சையர்மகளிர்
ஆனமாதரோ டாடுவரியக்கியரவரைச்
சோனைவார்குழ லரக்கியர்தொடர்குவர்தொடர்ந்தால்
ஏனைநாடிய ரருநடக்கிரியையாய்ந்திருப்பார். (உசு)

இழையுமாலையு மாடையுஞ்சாந்தமுமேந்தி
உழையரென்னகின் றுதவுவநிதியங்களொருவர்
விழையும்போகமே யிங்கிதுவாய்கொண்டுவிளம்பின்
குழையுநெஞ்சின னினையினுமாசென்றுகொள்ளும். (உஎ)

பொன்னின்மால்வரை மேன்மணிபொழிந்தன்னபொருத்தி
உன்னுநான்முகத் தொருவனின்றாழ்முறையுரைப்பப்
பன்னிநாள்பல பணியுழந்தரிதினிற்படைத்தான்
சொன்னவானவர் தச்சனுமிந்நகர்துதிப்பான். (உஅ)

மகரவீணையின் மந்திரகீதத்தின்மறைந்த
சகரவேலையி னார்கலிதிசைமுகன்றடவும்
சிகரமாளிகைத் தலந்தொறுந்தெரிவையர்கிவந்த
அகருதூபத்தி னழுந்தினமுகிற்குலமனைத்தும். (உகூ)

பளிக்குமாளிகைத் தலந்தொறுமிடந்தொறும்பசுந்தேன்
துளிக்குங்கற்பகத் தண்ணறுஞ்சோலைகடோறும்
அளிக்குந்தேறலுண் டாடுநர்பாடுநராகிக்
களிக்கின்றாரலாற் கவல்கின்றாரொருவரைக்காணேன். (௩௦)

தேறன்மாந்தினர் தேனிசைமாந்தினர்செவ்வாய்
ஊறன்மாந்தின ரின்னுலாமாந்தினரூடல்
கூறன்மாந்தின ரணையவர்த்தொழுதெழுகோபத்
தாறன்மாந்தின ரரக்கியர்க்குயிரன்னவரக்கர். (௩௧)

எறித்தகுங்குமத் திளமுலையெழுதியதொழில்கள்
கறுத்தமேனியிற் பொலிந்தனவுடலிற்கனன்று
மறித்துநோக்கியர் மலரடிமஞ்சளப்பஞ்சி
குறித்தகோலங்கள் பொலிந்தனவரக்கர்தங்குஞ்சி. (௩௨)

விளரிச்சொல்லியர் வாயினுன்வேலையுண்மிடைந்த
பவளக்காடெனப் பொலிந்ததுபடைநெடுங்கண்ணாற்
குவளைக்கோட்டகங் கடுத்ததுகுளிர்முகக்குழுவான்
முளரிக்கானமு மாயதுமுழுங்குநீரிலங்கை. (௩௩)

## அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

எழுந்தனர்திரிந்துவைகு மிடத்ததாயின்றுகாறும்
கிழிந்திலதண்டமென்னு மிதனையேகிளப்பதல்லால்
அழுந்திநின்றுவதென்னே யலருளோனாதியாக
ஒழிந்தபேருயிர்களெல்லா மரக்கருக்குறையும்போதா. (௩௪)

காயத்தாற்பெரியர்வீரங் கணக்கிலருலகங்கல்லும்
ஆயத்தார்வரத்தின்றன்மை யளவற்றாரறிதறேற்றாம்
மாயத்தார்நகர்க்கெங்கேனும் வரம்புமுண்டாமேமற்றோர்
தேயத்தார்தேயஞ்சேறல் தெருவினோர்தெருவின்சேறல். (௩௫)

கழலிலாக்காலுங்கால வயிலிலாக்கையுங்காந்தும்
அழலிலாக்கண்ணுமில்லா வாடவரில்லையன்னார்
குழலுலாங்களிவண்டார்க்குங் குஞ்சியாற்பஞ்சிகுன்றா
மழலையாழ்க்குதலைச்செவ்வாய் மாதருமில்லைமாதோ. (௩௬)

கள்ளுறக்களித்தபங்கி யரக்கரைக்கடுத்தகாதல்
புள்ளுறத்தொடர்வமேனி புலாலுறக்கடிதுபோவ
வெள்ளுறுப்பெயிற்றசெய்ய தலையனகரியமெய்ய
உள்ளுறக்களித்தகுன்றி னுயர்ச்சியவோடையானை. (௩௭)

வள்ளிநுண்மருங்குலன்ன வானவர்மகளிருள்ளம்
தள்ளுறப்பாணிதள்ளா நடம்புரிதடங்கண்மாதர்
வெள்ளிவெண்முறுவலூன்ற மடந்தையர்வெள்குகின்றார்
கள்ளிசையரக்கர்மாதர் களியிடுகுரவைகாண்பார். (௩௮)

ஒறுத்தலோங்கிற்கமற்றெம் முயர்படைக்கொருங்கிவ்வூர்வந்
திறுத்தலுமெளிதாமற்றும் யாவர்க்குமியக்கமுண்டே
கறுத்தவாளரக்கிமாரு மரக்கருங்கழித்துவீசி
வெறுத்தபூண்வெறுக்கையாலே தூருமிவ்வீதியெல்லாம். (௩௯)

வடங்களுங்குழையும்பூணு மாலையுஞ்சாந்தும்யானைக்
கடங்களுங்கலினமாவி லாழியுங்கணக்கிலாத
இடங்களுமிடங்கடோறும் யாற்றொடுமெடுத்தவெல்லாம்
அடங்கியதென்னினென்னே யாழியினாழ்ந்ததுண்டோ. (௪௰)

விற்படைபெரிதென்கோயான் வெற்படைமிகுமென்கோயான்
மற்படையுளதென்கோயான் வாட்படைவலிதென்கோயான்
கற்பணந்தண்டுபிண்டி பாலமென்றினையகாந்தும்
நற்படையுடைத்தென்கோயான் நாயகற்குணாக்குநாளில். (௪௧)

என்றனனிலங்கைநோக்கி யினையனபலவுமெண்ணி
நின்றவாளரக்கர்வந்து நேரினுநேர்வரொன்றாத்
தன்றகையனையமேனி சுருக்கியச்சரளச்சாரற்
குன்றிடையிருந்தான்வெய்யோன் குணாகடல்குளிப்பதானான். (௪௨)

கலிவிருத்தம்.

ஏய்வினையிறுதியிற் செல்வமெய்தினான்
ஆய்வினைமனத்திலா னறிஞர்சொற்கொளான்
வீவினைநினைக்கிலா னொருவன்மெய்யிலான்
தீவினையெனவிருள் செறிந்ததெங்குமே. (௪௩)

கரித்தமூன்றெயிலுடைக் கணிச்சிவானவன்
எரித்தலையந்தண ரிழைத்தயானையை
உரித்தபேருரிவையா லுலகுக்கோருறை
புரித்தனனெனப் பொலியும்பொற்பதே. (௪௪)

அணங்கரவரசர்கோ னளவிலாண்டெலாம்
பணங்களின்றலைதொறு முயிர்த்தபாய்விடம்
உணங்கலிலுலகெலா முறையினுண்டுவந்
திணங்கெரிபுகையொடு மெழுந்ததென்னவே. (௪௫)

வண்மைநீங்காநெடு மரபின்வந்தவன்
பெண்மைநீங்காத கற்புடையபேதையைத்
திண்மைநீங்காதவன் சிறைவைத்தானெனும்
வெண்மைநீங்கியபுகழ் விரிந்ததென்னவே. (௪௬)

அவ்வழியவ்விருள் பரந்தவாயிடை
எவ்வழிமருங்கினு மரக்கரோகினார்
செவ்வழிமந்திரத் திசையராயினும்
வெவ்வழியிருடர மிதித்துமீச்செல்வார். (௪௭)

இந்திரன்வளநகர்க் கேகுவாரிகற்
சந்திரனுலகினைச் சார்குவார்கலித்
தந்தகனுறையுளை யணுகுவாரியல்
வெந்தொழிலரக்கன தேவன்மேயினார். (௪௮)

பொன்னகர்மடந்தையர் விஞ்சைப்பூவையர்
பன்னகவனிதைய ரியக்கர்பாவையர்
முன்னினபணிமுறை மாறமுந்துவார்
மின்னினமிடைந்தென விசும்பின்மீச்செல்வார். (௪௯)

தேவருமவுணருஞ் செங்கணுகரும்
மேவருமியக்கரும் விஞ்சைவேந்தரும்
யாவரும்விசும்பிரு ளிரியவீண்டினார்
தாவரும்பணிமுறை தழுவுந்தன்மையார். (௫0)

சித்திரபத்தியிற் றேவர்சென்றனர்
இத்துணைதாழ்ந்தன முனியுமென்றுதம்
முத்தினாரங்களு முடியின்மாலையும்
உத்தரீயங்களு மிரியவோடுவார். (௫௧)

தீண்டருந்தீவினை தீக்கத்தீந்துபோய்
மாண்டறவுலர்ந்தது மாருதிப்பெயர்
ஆண்டகைமாரிவந் தளிப்பவாயிடை
ஈண்டறமுளைத்தென முளைத்ததிந்துவே. (௫௨)

வந்தனனிராகவன் றூதன்வாழ்ந்தனன்
எந்தையேயிந்திர னுமென்றேமுரு
அந்தமில்கீட்டிசை யளகவாணுதற்
சுந்தரிமுகமெனப் பொலிந்துதோன்றிற்றே. (௫௩)

கற்லைறவெண்கவ்ரிபோற் கடலின்வெண்டிரை
சுற்றுநின்றலமரப் பொலிந்துதோன்றிற்றால்
இற்றதெம்பகையென வெழுந்தவிந்திரன்
கொற்றவெண்குடையெனக் குளிர்வெண்டிங்களே. (௫௪)

தெரிந்தொளிர்திங்கள்வெண் குடத்தினூற்றிரை
முரிந்துயர்பாற்கடன் முகந்துமூரிவான்
சொரிந்ததேயாமெனத் துள்ளிமீனெடும்
விரிந்ததுவெண்ணிலா மேலுங்கீழுமே. (௫௫)

அருந்தவன்சுரபியே யாதிவானமா
விரிந்தபேருதயமே மடிவெண்டிங்களா
வருந்தலின்முலைகதிர் வழங்குதாரையாச்
சொரிந்தபாலொத்தது நிலவின்றோற்றமே. (௫௬)

எண்ணுடையநுமன்மே லிழிந்தபூமழை
மண்ணிடைவீழ்கில மறித்தும்போகில
அண்ணல்வாளரக்கனை யஞ்சியாய்கதிர்
விண்ணிடைத்தங்கின போன்றமீனெலாம். (௫௭)

எல்லியினிமிரிருட் குறையுமவ்விருள்
கல்லியநிலவின்வெண் முறியுங்கள்வன
புல்லியபகையெனப் பொருவபோன்றன
மல்லிகைமலர்தொறும் பொதிந்தவண்டெலாம். (ருஅ)

வீசுறுபசுங்கதிர்க் கற்றைவெண்ணிலா
ஆசுறவெங்கணு நுழைந்தளாயது
காசுறுகடிமதி லிலங்கைக்காவலூர்த்
தூசுறையிட்டது போன்றுதோன்றிற்றே. (ருகூ)

இகழ்வரும்பெருங்குணத் திராமனெய்ததோர்
பகழியின்செலவென வநுமன்பற்றினால்
அகம்புகுந்தரண்புகுந் திலங்கையன்னவன்
புகழ்புகுந்துலாயதோர் பொலிவும்போன்றதே. (சு0)

அவ்வழியநுமனு மணுகலாம்வகை
எவ்வழியென்பதை யுணர்வினெண்ணினான்
செவ்வழியொதுக்கினன் றேவரோத்தப்போய்
வெவ்வழியரக்கரூர் மேவன்மேயினான். (சுக)

வேறு.

ஆழியகழாகவரி தாயமரர்வாழும்
ஏழுலகின்மேலவெளி காறுமுகடேறிக்
கேழரியபொன்கொடு சமைத்தகிளர்வெள்ளத்
தூழிதிரிநாளுமுலை யாமதிலையுற்றான். (சுஉ)

கலங்கலில்கடுங்கதிர்கண் மீதுகடிதேகா
அலங்கலயில்வஞ்சகனை யஞ்சியெனினன்றால்
இலங்கைமதிலிங்கிதனை யேறலரிதென்றே
விலங்கியகல்கின்றன விரைந்தெனவியந்தான். (சுங)

தெவ்வளவிலாதவிறை சேறலுளதென்றால்
அவ்வளவதன்றரண மண்டமிடையாக
எவ்வளவிலுண்டுவெளி யீறமதுவென்னு
வெவ்வளவரக்கனை மனக்கொளவியந்தான். (சுச)

மடங்கலரியேறுமத மால்களிறுநாண
நடந்துதனியேபுகுது நம்பிநனிமூதூர்
அடங்கரியதானையயி லந்தகனதானைக்
கடுந்திறலின்வாயனைய வாயிலெதிர்கண்டான். (சுரு)

மேருவைநிறுத்திவெளி செய்ததுகொல்விண்ணோர்
ஊர்புகவமைத்தபடி கால்கொலுலகேழும்
சோர்விலநிலைக்கநடு விட்டதொருதூணோ
நீர்புகுகடற்குவழி யோவெனநினைந்தான். (சுசு)

ஏழுலகின்வாழுமுயிர் யாவையுமெதிர்ந்தால்
ஊழின்முறையன்றியுட னேபுகுதலுண்டே
வாழியரியங்குவழி யீதெனவகுத்தால்
ஆழியுளவேழினள வன்றுபகையென்றான். (௬எ)

வெள்ளமொருநூறொடொரு நூறுமுடைவீரக்
கள்ளவினைவெவ்வலி யரக்கரிருக்கையும்
முள்ளெயிறும்வாளுமுற முன்னமுறைநின்றார்
எள்ளரியகாவலினை யண்ணலுமெதிர்ந்தான். (௬அ)

சூலமழுவாளொடயி ரேமுமரமுலக்கை
காலவரிவிற்பகழி கற்பணமுசுண்டி
கோல்கணையநேமிகுலி சஞ்சரிகைகுந்தம்
வாலமுதலாயுதம் வலித்தனர்வலத்தார். (௬௯)

அங்குசநெடுங்கவண யிற்சிலைவழங்கும்
வெங்குசையபாசமுதல் வெய்யபயில்கையார்
செங்குருதியன்னசெறி குஞ்சியர்சினத்தோர்
பங்குனிமலர்ந்தொளிர் பலாசவனமொப்பார் (எ0)

அளக்கவரிதாகிய கணக்கொடயனீற்கும்
விளக்கினமிருட்டினை விழுங்கிவெளிகால
உளக்கடியகாலன்மன முட்குமணிவாயில்
இளக்கமில்கடற்படை யிருக்கையையெதிர்ந்தான். (எக)

எவ்வமரொவ்வவுண ரெவ்வருளரொன்னே
கவ்வைமுதுவாயிலி னெடுங்கடைகடப்பார்
தெவ்வரிவர்சேமமிது சேவகனும்யாமும்
வெவ்வமர்தொடங்கினி னெறுவிளையுமென்றான். (எ௨)

கருங்கடல்கடப்பதரி தன்றுநகர்காவற்
பெருங்கடல்கடப்பதரி தெண்ணமிறைபேரின்
அருங்கடன்முடிப்பதரி தாமமர்கிடைக்கின்
நெருங்கமர்கிடக்குநெடு நாளெனநினைந்தான். (எ௩)

வாயில்வழிசேறலரி தன்றியும்வலத்தோர்
ஆயிலவர்வைத்தவழி யேகலழகன்றால்
காய்கதிரியக்கின்மதி லைக்கடிதுதாவிப்
போயிநகர்புக்கிடுவெ னென்றெரயல்போனான். (எச)

## கலிநிலைத்துறை.

நாணுஞ்தானல்கியகாவனனிமூதூர்
வாணாளந்நாள்போவதின்மேலேவழிநின்றாள்
தூணென்னுந்தோளுடையானைச்சுடரோனைக்
காணுவந்தகட்செவியென்னக்கனல்கண்ணாள். (எரு)

எட்டுத்தோளாணுனுமுகத்தானுலகேழும்
தொட்டுப்பேருஞ்சோதிநிறத்தாள்சுழல்கண்ணாள்
முட்டிப்பேரின்மூவுலகத்தைமுதலோடும்
கட்டிச்சீறுங்காவல்வலத்தாள்கமையில்லாள். (எசு)

பாராநின்றாளெண்டிசைதோறும்பலரப்பால்
வாராநின்றாரோவெனமாரிமழையேபோல்
ஆராநின்றாணூபுரமச்சந்தருதாளாள்
வேராமெய்யாண்மின்னினிமைக்குமிளிர்பூணாள். (எஎ)

வேல்வாள்சூலம்வெங்கதைபாசம்விளிசங்கம்
கோல்வாள்குந்தங்கொண்டகரத்தாள்வடகுன்றம்
போல்வாடிங்கள்போழினையிற்றாள்புகைவாயிற்
கால்வாள்காணிற்காலனுமுட்குங்கதமிக்காள் (எஅ)

அஞ்சுவணத்தினுடையுடுத்தாளரவெல்லாம்
அஞ்சுவணத்தின்வேகமிகுத்தாளருளில்லாள்
அஞ்சுவணத்தினுத்தரியத்தாளலையாரும்
அஞ்சுவணத்தின்முத்தொளிராரத்தணிகொண்டாள் (எகூ)

சிந்தாரத்தின்செச்சையணிந்தாள்தெளிநூல்யாழ்
அந்தாரத்தினேர்வருசொல்லாளறைதும்பி
கந்தாரத்தினின்னிசைபாடிக்களிகூரும்
மந்தாரத்தின்மாலையலம்புமகுடத்தாள். (அ௦)

எல்லாமுட்குமாழியிலங்கையிகன்மூதூர்
நல்லாளவ்வூர்வைகுறையொக்குநயனத்தாள்
வில்லாய்வில்லாயென்றுரைநேர்வாணினையாமுன்
வல்லேசென்றாண்மாருதிகண்டான்வருகென்றான். (அக)

ஆகாசெய்தாயஞ்சலைபோலும்றிவில்லாய்
சாகாமூலந்தின்றுழல்வார்பாற்சலமென்னும்
பாகாரிஞ்சிப்பொன்மதிறாவிப்பதையாதே
போகாயென்றாள்பொங்கனலென்னப்புகைகண்ணாள். (அஉ)

களியாவுள்ளத்தண்ணன்மனத்திற்கதமூழ்க
விளியாநின்றேநீதிநலத்தின்வினையோர்வான்
அளியாலிவ்வூர்காணுநலத்தினணைகின்றேன்
எளியேனுற்றால்யாவதுனக்கிங்கிழவென்றான். (அங)

என்னாமுன்னமேகெனவேகாதெதிர்மாற்றம்
சொன்னாயேநீயாவனடாதொல்புரமட்டான்
அன்னோனுமஞ்சுவரெய்தற்களியுற்றால்
உன்னாலெய்துமூர்கொலிவ்வூரென்றுறநக்காள். (அச)

நக்காளைக்கண்டையன்மனத்தோர்நகைகொண்டான்
நக்காய்நீயார்யார்சொலவந்தாயுனதாவி
உக்காலேதானோடலையென்றாளினியிவ்வூர்
புக்காலன்றிப்போகிலெனென்றான்புகழ்கொண்டான். (௮௫)

வஞ்சங்கொண்டான்வானரமல்லன்வருகாலன்
துஞ்சுங்கண்டாலென்னையிவன்சூழ்திரையாழி
நஞ்சங்கொண்டகண்ணுதலைப்போனகுகின்றான்
நெஞ்சங்கண்டேகல்லெனநின்றேநினைவுற்றாள். (௮௬)

கொல்வாமன்றேற்கோளுறுமிவ்வூரெனல்கொண்டாள்
வெல்வாய்நீயேவென்றியெனத்தன்விழிதோறும்
வல்வாய்தோறும்வெங்கனல்பொங்கமதில்வாயில்
செல்வாயென்னாமூவிலைவேலைச்செலவிட்டாள். (௮௭)

தடித்தாமென்னத்தன்னெதிர்செல்லுந்தழல்வேலைக்
கடித்தானுகம்விண்ணின்முரிக்குங்கருளன்போல்
ஒடித்தான்கையாலும்பருவப்பவுயர்காலம்
பிடித்தாணெஞ்சந்துண்ணெனவெண்ணம்பிழையாதாள். (௮௮)

இற்றுச்சூலநீறேழுகாலத்தெரியொப்பாள்
மற்றுத்தெய்வப்பல்படைகொண்டுமலைவாண்மேல்
உற்றுக்கையாலாயுதமெல்லாமொழியாமல்
பற்றிக்கொள்ளாவிண்ணிலெறிந்தான்பழியோர்வான். (௮௯)

வழங்குந்தெய்வப்பல்படைகாணுண்மலைவான்மேல்
முழங்கும்மேகமென்னவுரப்பிமுதிர்கின்றாள்
கழங்கும்பந்துங்குன்றுகொடாடுங்கரமோச்சித்
தழங்குஞ்செந்தீச்சிந்தவடித்தாடகவில்லாள். (௯௦)

அடியாமுன்னமங்கையனைத்துமொருகையால்
பிடியாவென்னேபெண்ணிவள்கொல்விற்பிழையென்று
ஒடியாநெஞ்சத்தோரடிகொண்டானுயிரோடும்
இடியேறுண்டநாகமெனப்பாரிடைவீழ்ந்தாள். (௯௧)

விழுந்தாணொந்தாள்வெங்குருதிச்செம்புனல்வெள்ளத்
தழுந்தாநின்றாணான்முகனார்தம்மருளன்றி
எழுந்தாள்யாரும்யாவையுமெல்லாவுலகத்தும்
தொழுந்தாள்வீரன்றூதுவன்முன்னின்றிவைசொன்னாள். (௯௨)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஐயகேள்வையநல்கு மயனருளமைதியாக
எய்தியிம்மூதூர்காப்பெ னிலங்கைமாதேவியென்பேர்
செய்தொழிலிழுக்கியுள்ளந் திகைத்திந்தச்சிறுமைசெய்தேன்
உய்தியென்றளித்தியாயி னுணர்த்துவலுண்மையென்றாள். (௯௩)

எத்தனைகாலங்காப்பல் யானிந்தமூதூரொன்று
முத்தனைவினைவினேற்கு முரண்வலிக்குரங்கொன்றுன்னைக்
கைத்தலமதனாற்றீண்டிக் காய்ந்தவன்றென்னைக்காண்டி
சித்திரநகரம்பின்னைச் சிதைவதுதிண்ணமென்றான். (௯௪)

அன்னதேமுடிந்ததைய வறம்வெல்லும்பாவந்தோற்கும்
என்னுமீதியம்பவேண்டுந் தகையதோவினிமற்றுன்னால்
உன்னியவெல்லாமுற்று முனக்குமுற்றாததுண்டோ
பொன்னகர்புகுதியென்னாப் புகழ்ந்தவளிறைஞ்சிப்போனாள். (௯௫)

வீரனும்விரும்பிநோக்கி மெய்ம்மையேவினையுமஃதென்
றாரியன்கமலபாத மகத்துறவணங்கியாண்டப்
பூரியரிலங்கைமூதூர்ப் பொன்மதிறாவிப்புக்கான்
சீரியபாலின்வேலை சிறுபிரைதெறித்ததன்னான். (௯௬)

வான்றொடர்மணியிற்செய்த மையறுமாடகோடி
ஆன்றபேரிருளைச்சீத்துப் பகல்செய்தவழகைநோக்கி
ஊன்றியவுதயத்துச்சி யொற்றைவாளுருளைத்தேரோன்
தோன்றினன்கொல்லோவென்னா வறிவனுந்துணுக்கங்கொண்டான். (௯௭)

மொய்ம்மணிமாடமூதூர் முழுதிருளகற்றுந்தானே
மெய்ம்மையேயுணரினாணை மிகையெனவிலங்கிப்போனான்
இம்மதிலிலங்கைநாப்ப ணெய்துமேற்றன்பாலெய்து
மின்மினியல்லனோவவ் வெயிற்கதிர்வேந்தனென்றான். (௯௮)

பொசிவுறுபசும்பொற்குன்றிற் பொன்மதிணடுவட்பூத்து
வசையறவிளங்குஞ்சோதி மணியினாலமைந்தமாடத்
தசைவிலவிலங்கைமூதூ ராரிருளின்மையாலே
நிசிசரராயிற்றம்மா நெடுநகர்நிருதரெல்லாம். (௯௯)

என்றனனியம்பிவீதி யேகுதலிழுக்கமென்னாத்
தன்றகையனையமேனி சுருக்கிமாளிகையின்சாரல்
சென்றனனென்பமன்றோ தேவருக்கமுதமீந்த
குன்றெனவயோத்திவேந்தன் புகழெனக்குவவுத்தோளான். (௧௦௦)

ஆத்துறுசாலைதோறு மானையின்கூடந்தோறும்
மாத்துறுமாடந்தோறும் வாசியின்பந்திதோறும்
காத்துறுகடைகடோறுங் கருங்கடல்கடந்தகாலால்
பூத்தொறும்வாவிச்செல்லும் பொறிவரிவண்டிற்போனான். (௧௦௧)

பெரியநாளொளிகொளாறு விதமணிப்பித்திப்பத்தி
சொரியுமாநிழல்களாங்குச் சுற்றலாற்காலின்றோன்றல்
கரியனாய்வெளியனாகிச் செய்யனாய்க்காட்டுங்காண்டற்
கரியனாயெளியனாய்த்தன் னகத்துறையழகனேபோல். (௧௦௨)

கானகமயில்களென்னக் களிமடவன்னமென்ன
ஆனனகமலப்போது பொலிதரவரக்கர்மாதர்
தேனுகுசரளச்சோலை தெய்வநீராற்றிற்றெண்ணீர்
வானவர்மகளிராட்ட மஞ்சனமாடுவாரை. (௧௦௩)

ஈட்டுவார்தவமலான்மற் றீட்டினாலியைவதின்மை
காட்டினார்விதியாரஃது காண்கிற்பார்காண்மினம்மா
பூட்டுவார்முலைபொருத பொய்யிடைநையப்பூநீர்
ஆட்டுவாரமரர்மாத ராடுவாரரக்கர்மாதர். (௧௦௪)

இலக்கணமரபிற்கேற்ற வெழுவகைநரம்பினால்யாழ்
அலத்தகத்தளிர்க்கைநோவ வளந்தெடுத்தமைந்தபாடல்
கலக்குறமுழங்கிற்றென்று சேடியர்கன்னிமார்கள்
மலர்க்கையான்மாடத்தும்பர் மழையின்வாய்பொத்துவாரை. (௧௦௫)

சந்தப்பூம்பந்தர்வேய்ந்த தமனியவரங்கிற்றத்தம்
சிந்தித்ததுதவுந்தெய்வ மணிவிளக்கொளிருஞ்சேக்கை
வந்தொத்துந்துரிதமாக்கள் விளம்பித்தந்நெறிவழாமை
கந்தர்ப்பமகளிராடு நாடகங்காண்கின்றாரை. (௧௦௬)

திருத்தியபளிக்குவேதி தெள்ளியவேல்களென்னக்
கருத்தியல்புனைக்குழுண்கட் கருங்கயல்செம்மைகாட்ட
வருத்தியகொழுநர்தம்பால் வரம்பின்றிவளர்ந்தகாம
வருத்தியபயிர்க்குநீர்போ லருநறவருந்துவாரை. (௧௦௭)

கோதறுங்குவளைநாட்டங் கொழுநர்களுட்டங்கொள்ளத்
தூதுளங்கனியைவென்ற துவர்த்தவாய்வெண்மைதோன்ற
மாதருமைந்தர்தாமு மொருவர்மேலொருவர்வைத்த
காதலங்கள்ளுண்டார்போன் முறைமுறைகளிக்கின்றாரை. (௧௦௮)

விற்படர்பவளப்பாதத் தலத்தகமெழுதிமேனி
பொற்பளவில்லாவாசப் புனைநறுங்கலவைபூசி
அற்புதவடிக்கண்வாளி னஞ்சனமெழுதியந்தில்
கற்பகங்கொடுக்கவாங்கிக் கலன்றெரிந்தணிகின்றாரை. (௧௦௯)

புலியடுமதுகைமைந்தர் புதுப்பிழையுயிரைப்புக்கு
நலிவிடவமுதவாயா னச்சுயிர்த்தயிற்கணல்லார்
மெலிவுடைமருங்குன்மின்னி னலமரச்சிலம்புவிம்மி
ஒலியடவுதைக்குந்தோறு மயிர்புளகுதிக்கின்றாரை, (௧௧௦)

உள்ளுடைமயக்கானுண்கண் சிவந்துவாய்வெண்மையூறித்
துள்ளிடைப்புருவங்கோட்டித் துடிப்பவேர்பொடிப்பத்தூய
வெள்ளிடைமருங்குலார்தம் மதிமுகம்வேறொன்றாகிக்
கள்ளிடைத்தோன்றநோக்கிக் கணவரைக்கவல்கின்றாரை. (௧௧௧)

ஆலையின்மலையின்சாரன் முழையினிலமுதவாரிச்
சோலையிற்றுவசரில்லிற் சோனகர்மனையிற்றூய
வேலையிற்கொளவொணாத வேற்கணார்குமுதச்செவ்வாய்
வாலெயிற்றூறுதீந்தேன் மாந்தினர்மயங்குவாரை. (ககஉ)

நலனுறுகணவர்தம்மை நணையுறப்பிரிந்தநல்கு
முலையுறுகலவைதீய முள்ளிலாமுளரிச்செங்கேழ்
மலர்மிசைமலர்பூத்தென்ன மலர்க்கையாலதனைத்தாங்கி
உலவருமுயிரினோடு நெடிதிருந்துயிர்க்கின்றாரை. (ககங)

ஏதியங்கொழுநர்தம்பா லெய்தியசலத்தர்வைகும்
தாதியங்கமளிச்சேக்கை யுயிரிலாவுடலிற்சார்வார்
மாதுயர்க்காதறூண்ட வழியின்மேல்வைத்தகண்ணார்
தூதியர்முறுவனோக்கி யுயிர்வந்துதுடிக்கின்றாரை. (ககச)

சங்கொடுசிலம்புநூலும் பாதசாலகமுந்தாழப்
பொங்குபன்முரசமார்ப்ப வில்லுறைதெய்வம்போற்றிக்
கொங்கலர்கூந்தற்செவ்வா யரம்பையர்பாணிகொட்டி
மங்கலகீதம்பாட மலர்ப்பலிவகுக்கின்றாரை. (ககரு)

இழைதொடர்வில்லும்வாளு மிருளொடுமலையயாணர்க்
குழைதொடர்நயனக்கூர்வேல் குமரர்நெஞ்சுருவக்கோட்டி
முழைதொடர்சங்கம்பேரி முகிலெனமுழங்கமூரி
மழைதொடர்மஞ்ஞையென்ன விழாவொடுவருகின்றாரை. (ககசு)

பள்ளியின்மைந்தரோடு மூடியபண்புநீங்கி
ஒள்ளியகலவிப்பூச லுடற்றுதற்குருத்தநெஞ்சர்
மெள்ளவேயிமையைநீக்கி யஞ்சனவிழுதுவேய்ந்த
கள்ளவாணெடுங்கணென்னும் வாளுறைகழிக்கின்றாரை (ககஎ)

ஓவியமனையமாத ரூடினருணர்வோடுள்ளம்
மேவியகரணமற்றுங் கொழுநரோடொழியயாணர்த்
தூவியம்பேடையென்ன மின்னெனத்துவளவேகி
ஆவியுந்தாமுமேசென் றருங்கதவடைக்கின்றாரை. (ககஅ)

கின்னரமிதுனம்பாட வெண்மழைகிழித்துத்தோன்று
மின்னெனத்தரளம்வேய்ந்த வெண்ணிறவிமானமூர்ந்து
பன்னகமகளிர்சுற்றிப் பலாண்டிசைபரவப்பண்ணைப்
பொன்னகர்வீதிதோறும் புதுமனைபுகுகின்றாரை. (கககூ)

கோவையுங்குழையுமின்னக் கொண்டலின்முரசமார்ப்பத்
தேவர்வந்தாசிகூற முனிவர்சோபனங்கள்செப்பப்
பாவையர்குழாங்கள்சூழப் பாட்டொடுவானநாட்டுப்
பூவையர்பலாண்டுகூறப் புதுமணம்புணர்கின்றாரை. (கஉ0)

இயக்கியரரக்கிமார்க ளாகியவொஞ்சில்விஞ்சை
முயற்கறைமலராத்திங்கண் முகத்தியர்முதலினோரை
மயக்கறநாடியேகு மாருதிமலையின்வைகும்
கயக்கமிறுயிற்சிக்கும்ப கருணனைக்கண்ணிற்கண்டான். (கஉக)

கலிவிருத்தம்.

ஓசனையேழகன் றுயர்ந்தவும்பரின்
வாசவன்மணிமுடி கவித்தமண்டபம்
ஏசறவிளங்கிய திருவையெவ்வகை
ஆசையினிலைகெட வலைக்கலான்றது. (கஉஉ)

அன்னதனடுவணோ ரமளிமீமிசைப்
பன்னகவரசெனப் பரவைதானெனத்
தன்னிருளொருவழி தொக்கதாமென
உன்னருந்தீவினை யுருக்கொண்டென்னவே. (கஉங)

முன்னியகலைகடன் முழுகிமூவகைத்
தன்னியல்கதியொடு தழுவித்தாதுகு
மன்னெடுங்கற்பக வனத்துள்வைகிய
இன்னிளந்தென்றல்வந் திழுகியேகவே. (கஉச)

வானவர்மகளிர்கால் வருடமாமதி
ஆனனங்கண்டமண் டபத்துளாய்கதிர்க்
கானகுகாந்தமிக் கான்றகாமர்நீர்
தூகிறநறுந்தளி முகத்திற்றேற்றவே. (கஉரு)

மூசியவுயிர்ப்பெனு முடுகுவாதமும்
வாசலின்புறத்திடை நிறுவிவன்மையான்
நாசியினளவையி னடத்தக்கண்டவன்
கூசினன்குதித்தனன் விதிர்த்தகையினன். (கஉசு)

பூழியின்றொகைவிசும் பணவப்போய்ப்புகும்
கேழில்வெங்கிளர்கிடை யுயிர்ப்புக்கேடிலா
வாழியவுலகெலாந் துடைக்குமாருதம்
ஊழியின்வரவுபார்த் துழல்வதொத்ததே. (கஉஎ)

பகையெனமதியினைப் பகுத்துப்பாடுற
வகையில்பேழ்வாய்மடுத் தருந்துவானெனப்
புகையொடுமுழங்குபே ருயிர்ப்புப்பொங்கிய
நகையிலாமுழுமுகத் தெயிறுநாறவே. (கஉஅ)

தடைபுகுமந்திரந் தகைந்தநாகம்போல்
இடைபுகலரியதோ ருறக்கமெய்தினன்
கடையுகமுடிவெனுங் காலம்பார்த்தயல்
புடைபெயராநெடுங் கடலும்போலவே. (கஉகூ)

### கலிநிலைத்துறை.

ஆவதாகிய தன்மையவரக்கனையரக்கர்
கோவெனாநின்ற குணமிலியிவனெனக்கொண்டான்
காவனாட்டங்கள் பொறியுகக்கனலெனக்கனன்றான்
ஏவனோவிவன் மூவரினொருவனாமீட்டான். (கரு0)

குறுகிநோக்கி மற்றவன்றலையொருபதுங்குறித்த
இறுகுதிண்புய மிருபதிங்கிவனிலனென்னா
மறுகியேறிய முனிவெனும்வடவைவெங்கனலை.
அறிவெனும்பெரும் பரவையம்புனலினாலவித்தான். (கருக)

அவித்துநின்றவ னாயினுமாகவென்றங்கை
கவித்துநீங்கிடச் சில்பகலென்பதுகருதாச்
செவிக்குத்தேனென விராகவன்புகழினைத்திருத்தும்
கவிக்குநாயக னனையவனுறையுளைக்கடந்தான். (கருஉ)

மாடகூடங்கண் மாளிகையோளிகைமகளிர்
ஆடரங்குக ளம்பலந்தேவராலயங்கள்
பாடல்வேதிகை பட்டிமண்டபமுதற்பலவும்
நாடியேகின னிராகவன்புகழெனுநலத்தான். (கருங)

மணிகொள்வாயிலுட் சாளரத்தாள்களின்மலரில்
கணிகொளுளத்திற் காலினும்புகையினுங்கலக்கும்
நுணுகும்வீங்குமற் றவனிலையாவரோதுவல்வார்
அணுவின்மேருவி னாழியானெனச்செலுமநுமன். (கருச)

ஏந்தலிவ்வகை யெவ்வழிமருங்கினுமெய்திக்
காந்தண்மெல்விரன் மடந்தையர்யாரையுங்காண்பான்
வேந்தர்வேதியர் மேலுளோர்கீழுளோர்விரும்பப்
போந்தபுண்ணியன் கண்ணகன்கோயிலுட்புக்கான். (கருரு)

பளிக்குவேதிகைப் பவளத்தின்கூடத்திற்பசுந்தேன்
துளிக்குங்கற்பகப் பந்தரிற்கருநிறத்தோளா
வெளித்துவைகுவ தருமையென்றவருருமேவி
ஒளித்துவாழ்கின்ற தருமமன்னான்றனையுற்றான். (கருசு)

உற்றுநின்றவ னுணர்வைத்தன்னுணர்வினாலுணர்ந்தான்
குற்றமில்லதோர் குணமுளனிவனெனக்கொண்டான்
செற்றநீங்கிய மனத்தினனொருசிறைசென்றான்
பொற்றைமாடங்கள் கோடியோர்நொடியிடைப்புக்கான். (கருஎ)

முந்தரம்பையர் முதலினர்முழுமதிமுகத்துச்
சிந்துரம்பயில் வாய்ச்சியர்யாரையுந்தெரிந்து
மந்திரம்பல கடந்தவன்மனத்தின்முன்செல்வான்
இந்திரன்சிறை யிருந்தவாயிலின்கடையெதிர்ந்தான். (கருஅ)

ஏதியேந்திய தடக்கையர்பிறையெயிறிலங்க
மூதுரைப்பெருங் கதைகளும்பிதிர்களுமொழிவார்
ஓதிலாயிர மாயிரமுணர்விலியரக்கர்
காதுவெஞ்சினக் களியினர்காவலைக்கடந்தான். (௧௬௯)

முக்கணோக்கினன் முதன்மகனறுவகைமுகனும்
திக்குநோக்கிய புயங்களுஞ்சிலகரந்தலையான்
ஒக்கநோக்கியர் குழாத்திடையுறங்குகின்றானைப்
புக்குநோக்கினன் புகைபுகாவாயிலும்புகுவான். (௧௭௦)

வளையும்வாளெயிற் றரக்கனோகணிச்சியான்மகனோ
அளையில்வாளரி யனையவன்யாவனோவறியேன்
இளையவீரனு மேந்தலுமிருவரும்பலநாள்
உளையவுள்ளபோ ரிவனொடுமுளதெனவுணர்ந்தான். (௧௭௧)

இவனையின்றுணை யுடையபோரிராவணனென்னே
புவனமூன்றையும் வென்றதோர்பொருளெனப்புகறல்
சிவனைநான்முகத் தொருவனைத்திருநெடுமாலாம்
அவனையல்லவர் நிகர்ப்பவொன்பதுமறிவோ. (௧௭௨)

என்றுகைம்மறித் திடைநின்றகாலத்தையிகப்ப
தன்றுபோவதென் றாயிரமாயிரந்தடங்காத்
துன்றுமாளிகை யொளிகடுரிசறத்துருவிச்
சென்றுதேடின னிந்திரசித்துலைத்தீர்ந்தான். (௧௭௩)

அக்கன்மாளிகை கடந்துபோய்மேலதிகாயன்
தொக்ககோயிலும் பொருநர்களில்லமுந்துருவித்
தக்கமந்திரத் தலைவர்கண்மனைகளுந்தாவிப்
புக்குநீங்கின னிராகவன்கழலெனப்புகழோன். (௧௭௪)

இன்னராமிரும் பெரும்படைத்தலைவர்களிருக்கைப்
பொன்னின்மாளிகை யாயிரகோடியும்புக்கான்
கன்னிமாநகர்ப் புறத்தகன்கரந்துறைகாண்பான்
சொன்னமூன்றினு நடுவணத்தகழியைத்தொடர்ந்தான். (௧௭௫)

தனிக்கடக்களி றெனவொருதுணையிலான்றூய
பனிக்கடற்பெருங் கடவுடன்பரிபவந்துடைப்பான்
இனிக்கடப்பதன் றேழ்கடல்கிடந்ததென்றிசைத்தான்
கனிக்கடற்கதிர் தொடர்ந்தவனகழியைக்கண்டான். (௧௭௬)

பாழிநன்னெடுங் கிடங்கெனப்பகர்வோற்பல்லோர்
ஊழிகாலநின் றுலகெலாங்கல்லினுமூலவா
ஆழிவெஞ்சினத் தரக்கனையஞ்சியாழ்கடல்கள்
ஏழுமிந்நகர் சுலாயதுகொலாமெனவிசைத்தான். (௧௭௭)

ஆயதாகிய வகன்புனலகழியையடைந்தான்
தாயவேலையி னிருமடிவிசைகொடுதாவிப்
போயகாலத்தும் போக்கரிதென்பதுபுகன்ருன்
நாயகன்புகழ் நடந்தபேருலகெலாநடந்தான். (கசஅ)

கலிவிருத்தம்.

மேக்குநால்வகை மேகமுங்கீழ்விழத்
தூக்கினலன்ன தோயத்ததாய்த்துயர்
ஆக்கினன்படை யன்னவகழியை
வாக்கினலுரை வைக்கலுமாகுமோ. (கசகு)

ஆனைமும்மத மும்பரியாழியும்
வானமங்கையர் குங்குமவாரியும்
நானமாதர் நறைக்குழலாவியும்
தேனுமாரமுந் தேய்வையுநாறுமால். (கருo)

உன்னுநான்மா மகன்றில்பிதாவுளில்
அன்னங்கோழிவண் டானங்களாழிப்புள்
கின்னரங்குரண் டங்கிலுக்கஞ்சிரல்
சென்னங்காகங் குணலஞ்சிலம்புமே. (கருக)

நலத்தமாதர் நறையகிலாவியும்
அலத்தகக்குழம் புஞ்செறிந்தாடிய
விலக்கணக்கரி யோடிளமென்னடைக்
குலப்பிடிக்குமொ ரூடல்கொடுக்குமால். (கருஉ)

நறவுநாறிய நாணமுந்தாமரை
துறைகடோறு முகிழ்த்தனதோன்றுமால்
சிறையினெய்திய செல்விமுகத்தினே
டுறவுதாமுடை யாரொடுங்கார்களோ. (கருக)

பளிங்குசெற்றிக் குயிற்றியபாயொளி
விளிம்பும்வெள்ளமு மெய்தெரியாதுமேல்
தெளிந்தசிந்தை யருஞ்சிறியார்களோ
டளிந்தபோதறி தற்கெளிதாவரோ. (கருச)

நீலமேமுத னன்மணிநித்திலம்
மேலகீழபல் வேறொளிவீசலால்
பாலின்வேலை முதற்பலவேலையும்
கால்கலந்தன வோவெனக்காட்டுமே. (கருரு)

அன்னவேலை யகழியையார்கலி
என்னவேகடந் திஞ்சியும்பிற்படத்
துன்னருங்கடி மாநகர்துன்னினன்
பின்னரெய்திய தன்மையும்பேசுவாம். (கருசு)

கரியநாழிகை பாதியிற்காலனும்
வெருவியோடு மரக்கர்தம்வெம்பதி
ஒருவனேயொரு பன்னிருயோசனைத்
தெருவுமும்மை நூறுயிரந்தேடினன். (கருள)

வேறு.

வேரியுமடங்கின நெடுங்கடல்விளம்பும்
பாரியுமடங்கின தடங்கியதுபாடல்
காரியமடங்கினர்கள் கம்மியர்கண்மும்மைத்
தூரியமடங்கின தொடங்கியதுறக்கம். (கருஅ)

இறங்கினவிறங்கொள்பரி யேமமுறவெங்கும்
கறங்கினமறங்கொளெயில் காவலர்துடிக்கண்
பிறங்கினர்நறுங்குழ லிரன்பர்பிரியாதோர்
உறங்கினர்பிணங்கியெதி ரூடினவரல்லார். (கருகூ)

வடந்தருகடங்கொள்புய மைந்தர்கலவிப்போர்
கடந்தனரிடைந்தனர் களித்தமயில்போலும்
மடந்தையர்கடந்தன முகட்டிடைமயங்கிக்
கிடந்தனர்நடந்தது புணர்ச்சிதருகேதம், (கசுo)

வாமநறையின்றுறை மயங்கினர்மறந்தார்
காமநறையின்றிற நுகர்ந்தனர்களித்தார்
பூமனறைவண்டறை யலங்கமளிபுக்கார்
தூமநறையின்றுறை பயின்றிலர்துயின்றார். (கசுக)

பண்ணிமையடைத்தபல கட்பொருநர்பாடல்
விண்ணிமையடைத்தன விளர்ந்ததிருள்வீணை
தண்ணிமையடைத்தன தழங்கிசைவழங்கும்
கண்ணிமையடைத்தன வடைத்தனகபாடம். (கசுஉ)

விரிந்தனநரந்தமுதல் வெண்மலர்விளாகத்
திரிஞ்சவருதென்றலுயி ரின்புடையுலாவச்
சொரிந்தனகருங்கண்வரு துள்ளிதருவெள்ளம்
எரிந்தனபிரிந்தவர்த மெஞ்சுதலினெஞ்சம். (சகுங)

இளக்கரிமூதெஞ்சவிழு மெண்ணருவிளக்கைத்
துளக்கியதுதென்றல்பகை சோரவுயர்வோரின்
அளக்கரொடளக்கரிய வாசையுறவீசா
விளக்கினம்விளக்குமணி மெய்யுறுவிளக்கம். (கசுச)

நித்தநியமத்தொழில ராய்நிறையுஞானத்
துத்தமருறங்கினர்கள் யோகியர்துயின்றார்
மத்தமதவெங்களிறு றங்கினமயக்கும்
பித்தருமுறங்கினரி னிப்பிறரிதென்னும். (கசுரு)

ஆயபொழுதம்மதி லகத்தரசர்லவரும்
தூயதெருவொன்றொடொரு கோடிதுருவிப்போய்த்
தீயவனிருக்கையயல் செய்தவகழிஞ்சி
மேயதுகடந்தனன் வினைப்பகையைவென்றான். (௧௬௬)

வேறு.

போரியற்கை யிராவணன்பொன்மனை
சீரியற்கை நிரம்பியதிங்களாத்
தாரகைக்குழு விற்றழுவித்தொடர்
நாரியர்க்குறை வாமிடநண்ணினான். (௧௬௭)

முயற்கருங்கறை நீங்கியமொய்ம்மதி
அயர்க்கும்வாண்முகத் தாரமுதன்னவர்
இயக்கர்மங்கையர் யாவருமீண்டினார்
நயக்குமாளிகை வீதியைநண்ணினான். (௧௬௮)

தழைந்தமொய்யொளி பெய்ம்மணித்தாழ்தொறும்
இழைந்தநூலினு மின்னிளங்காலினும்
நுழைந்துநொய்தினின் மெய்யுறநோக்கினான்
விழைந்தவெவ்வினை வேரறவீசினான். (௧௬௯)

அத்திரம்புனை யானையரக்கன்மேல்
வைத்தசிந்தையர் வாங்குமுயிர்ப்பினர்
பத்திரம்புலா நாட்டம்பதைப்பறச்
சித்திரங்க ளெனவிருந்தார்சிலர். (௧௭0)

வள்ளல்வெஞ்சர மாரனையஞ்சியோ
மெள்ளவேகன வின்பயன்வேண்டியோ
கள்ளமென்கொல திந்திலங்கண்முகிழ்த்
துள்ளமின்றி யுறங்குகின்றார்சிலர். (௧௭௧)

பழுதின்மன்மதன் வெங்கணைபன்முறை
உழுதகொங்கைய ருசலுயிர்ப்பினர்
அழுதுசெய்வதென் னனையரக்கனை
எழுதலாங்கொலென் றெண்ணுகின்றார்சிலர். (௧௭௨)

ஆவதொன்றரு ளாயெனதாவியைக்
கூவுகின்றிலை கூறலைசென்றெனாப்
பாவைபேசுவ போற்கண்பனிப்புறப்
பூவையோடும் புலம்புகின்றார்சிலர். (௧௭௩)

ஈரத்தென்ற லிழுகமெலிந்துதம்
பாரக்கொங்கையைப் பார்த்தனர்பாதகன்
வீரத்தோள்களின் வீக்கமினைந்துயிர்
சோரச்சோரத் துளங்குகின்றார்சிலர். (௧௭௪)

நக்கசெம்மணி நாறியநாணிழல்
பக்கம்வீசுறு பள்ளியிற்பல்பகல்
ஒக்கவாசை யுலக்கவுலந்தவர்
செக்கர்வான்றரு திங்களொத்தார்சிலர். (௧௭௫)

வாளினுற்றெளி கற்பகவல்லியர்
தோளினுற்றிய தூங்கமணித்துயில்
நாளினுற்செவி யிற்புகாமயாழ்த்
தேளினுற்றிகைப் பெய்துகின்றார்சிலர். (௧௭௬)

கவ்வுதீக்கனை மேருவைக்கால்வளைத்
தெவ்வினன்மலை யேந்தியவேந்துதோள்
வவ்வுசார்ந்ததம் மாமுலைவெளவிய
செவ்விகண்டு குலாவுகின்றார்சிலர். (௧௭௭)

கூடிநான்குயர் வேலையுங்கோக்கநின்
றாடினன்புக ழங்கைநரம்பினால்
நாடிநாற்பெரும் பண்ணுநயப்புறப்
பாடினன்பெயர் பாடுகின்றார்சிலர். (௧௭௮)

இனையதன்மை யியக்கியரெய்திய
மனையொராயிர மாயிரகோடியாம்
அனையவன்குலத் தாயிழையாரிடம்
வினைவினெய்தின வீதியினெய்தினன். (௧௭௯)

## அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

எரிசுடர்மணியின்செங்கே ழிளவெயிலிடைவிடாது
விரியிருள்பருகிநாளும் விளக்கின்றிவிளங்குமாடத்
தரிவையர்குழுவுநீங்க வாசையுந்தாமுமேயாய்
ஒருசிறையிருந்துபோன வுள்ளத்தோடேவாரும். (௧௮௦)

நகையெரிக்கற்றைநெற்றி நாவிதோய்ந்தனையவோதி
புகையெனத்தும்பிசுற்றப் புதுமலர்பொங்குசேக்கை
பகையெனவேகியான்ற பளிங்குடைச்சீதப்பள்ளி
மிகையொடுங்காதகாம விம்மலின்வெதும்புவாரும் (௧௮௧)

சவிபடுதகைசால்வானந் தானொருமேனியாக்க்
குவியுமீனாரமாக மின்கொடிமருங்குலாகக்
கவிரொளிச்செக்கர்க்கற்றை யோதியாமழையுண்கண்ணு
அவிர்மதிநெற்றியாக வந்திவாளொக்கின்றாரும். (௧௮௨)

பானலுண்கண்ணும்வண்ணப் படிமுறைமாதப்பண்ணைச்
சோனைபோன்றளிகள்பம்புஞ் சுரிகுழற்கற்றைசோர
மேனிமிர்ந்தெழுந்தமாட வெண்ணிலாமுன்றினண்ணி
வானமீன்கையின்வாரி மணிக்கழங்காடுவாரும். (௧௮௩)

உழையுழைபரந்தவான யாற்றுநின்றும்பர்நாட்டுக்
குழைமுகத்தாயந்தந்த புனல்குளிர்ப்பிலவென்றூடி
இழைதொடுத்திலங்குமாட மிடைதடுமாறவேறி
மழைபொதுத்தொழுகுநீரான் மஞ்சனமாடுவாரும். (௧௮௪)

பன்னகவரசர்செங்கேழ்ப் பணமணிவலிதிற்பற்றி
இன்னுயிர்க்கணவனீந்தா ளுமெனவிருத்திவிஞ்சை
மன்னவர்முடியும்பூணு மாரமும்பணையமாகப்
பொன்னணிபலகைசூது துயில்கிலர்பொருகின்றாரும். (௧௮௫)

தென்னகுருடமுட்பாடல் சித்தியரிசைப்பத்தீஞ்சொற்
பன்னகமகளிர்வள்வார்த் தண்ணுமைபாணிபேணப்
பொன்னகர்த்தரளப்பந்தர்க் கற்பகப்பொதும்பர்பொற்றோள்
இன்னகையரம்பைமாரா யாடல்கண்டிருக்கின்றாரும். (௧௮௬)

ஆணியிற்கிடந்தகாத லகஞ்சுடவருவியுண்கண்
சேணுயருறக்கந்தீர்ந்த சிந்தையர்செய்வதோரார்
வீணையுங்குழலுந்தத்த மிடறும்வேற்றுமையுந்தீர்ந்த
பாணிகளளந்தபாட லமிழ்துகப்பாடுவாரும். (௧௮௭)

தண்டலைவாழையன்ன குறங்கிடையல்குற்றட்டில்
கொண்டபூந்துகிலுங்கோவை கலைகளுஞ்சோரக்கூர்ங்கள்
உண்டலமர்ந்தகண்ணோ சேலிட்டுலாவுகின்ற
குண்டலந்திருவில்வீசக் குரவையிற்குழற்றுவாரும். (௧௮௮)

நச்செனக்கொடியநாகக் கள்ளொடுகுருதிநக்கிப்
பிச்சரிற்பிதற்றியல்குற் பூந்துகில்கலாபம்பீறிக்
குச்சரித்திறத்திறோசை களங்கொளக்குழூஉக்கொண்டண்டிச்
சச்சரிப்பாணிகொட்டி நிறைதடுமாறுவாரும். (௧௮௯)

தயிர்நிறத்துறுகளுள்ளந் தள்ளுறவறிவுதள்ளிப்
பயிர்வுறத்தெய்வமென்மேற் படிந்ததுபார்மினென்று
உயிருயிர்த்திரண்டுகையு முச்சிமேலுயரநீட்டி
மயிர்சிலிர்த்துடலுங்கூசி வாய்விரித்தொடுங்குவாரும். (௧௯௦)

இத்திறத்தரக்கிமார்க ளீரிருகோடியீட்டப்
பத்தியருறையுந்தெய்வப் படர்நெடுந்தெருவும்பார்த்தான்
சித்தியருறையுமாடத் தெருவும்பின்னாகச்சென்றான்
உத்திசைவிஞ்சைமாத ருறையுளைமுறையினுற்றான். (௧௯௧)

வேறு.

வளர்ந்தகாதலர்மகரிகைநெடுமுடி யரக்கனைவரக்காணார்
தளர்ந்தசிந்தைதம்மிடையினுநுடங்கிட வுயிரொடுதடுமாறிக்
களந்தவாநெடுங்கருவியிற்கைகளிற் செயிரியர்கலைக்கண்ணால்
அளந்தபாடல்வெவ்வரவுதஞ்செவிபுக வலமரலுறுகின்றார். (௧௯௨)

புரியுநன்னெறிமுனிவரும்புலவரும் புகலிலாப்பொறைகூர
எரியும்வெஞ்சினத்திகலடுகொடுந்திற லிராவணற்கெஞ்ஞான்றும்
பரியுநெஞ்சினரிவரொனவயிர்த்ததோர் பகைகொடுபனித்திங்கள்
சொரியும்வெங்கதிர் துணைமுலைக்குவைசுடக் கொடிகளிற்றுடிக்கின்றார். (௧௯௩)

சிறுகுகாலங்களூழிகளாம்வகை திரிந்துசிந்தனைசிந்த
முறுகுகாதலின்வேதனையுழப்பவர் முயங்கினர்முலைமுன்றில்
இறுகுசாந்தமுமெழுதுநற்குறிகளு மின்னுயிர்ப்பொறையீர
மறுகுவாட்கண்கள்சிவப்புறநோக்கினர் வயிர்த்தனருயிர்க்கின்றார். (௧௯௪)

ஆயவிஞ்சையர்மடந்தையருறைவிட மாறிரண்டமைகோடி
தூயமாளிகைநெடுந்தெருத்துருவிப்போய்த் தொலைவின்மூன்றுலகிற்கும்
நாயகன்பெருங்கோயிலைநண்ணுவான் கண்டனனளிர்திங்கள்
மாயநந்தியவாண்முகத்தொருதனி மயன்மகளுறைமாடம். (௧௯௫)

கண்டுகண்ணொடுகருத்தொடுகடாவினன் காரணங்கடைநின்ற
துண்டுவேறொருசிறப்பெங்கணுயகர்க் குயிரினுமுரியாளைக்
கொண்டுபோந்தவன்வைத்ததோருறையுள் கொல்குலமணிமனைக்கெல்லாம்
விண்டுவின்றடமார்பினின்மணியொத்த திதுவெனவியப்புற்றான். (௧௯௬)

அரம்பைமேனகைதிலோத்தமையுருப்பசி யாதியர்மலர்க்காமன்
சரம்பெய்துணிபோறளிரடிதாந்தொடச் சாமரைபணிமாறக்
கரும்பையுஞ்சுவைகைப்பித்தசொல்லியர் காமரங்கனியாழின்
நரம்பினின்னிசைசெவிபுகநாசியிற் கற்பகவிரைநாற. (௧௯௭)

விழைவுநீங்கியமேன்மையோராயினுங் கீழ்மையோர்வெகுள்வுற்றால்
பிழைகொணன்மைகொல்பெறுவதென்றையுறு பீழையாற்பெருந்தென்றல்
உழையர்கூவப்புக்கேதெனப்பெயர்வதோ ருசலினுளதாகும்
பழையம்யாமெனப்பண்பிலசெய்வரோ பருணிதர்பயனோர்வார். (௧௯௮)

இன்னதன்மையினெரிமணிவிளக்கங்க ளெழில்கெடப்பொலிகின்ற
தன்னதின்னொளிதழைப்புறத்துயில்வுறு தையலைத்தகைவில்லான்
அன்னளாகியசானகியிவளென வயிர்த்தகத்தெழுவெந்தீ
தின்னுமாருயிருடலொடுசுடுவதோர் துயருழந்திவைசொன்னான். (௧௯௯)

எற்புவான்றொடர்யாக்கையாற்பெறும் பயனிகந்தனெனிதுநிற்க
அற்புவான்றளையிற்பிறப்பதனொடு மிகழ்ந்துதன்னருந்தெய்வக்
கற்புநீங்கியகனங்குழையிவளெனிற் காகுத்தன்புகழோடும்
பொற்பும்யானுமிவ்விலங்கையுமரக்கரும் பொன்றுதமின்றென்றான். (௨௦௦)

மானுயர்த்திருவடிவினரவரிவண் மாறுகொண்டனள்கூறின்
தானியக்கியோதானவர்தையலோ வையுறுந்தகையாளுள்
கானுயர்த்ததாரிராமன்மேனோக்கிய காதல்காரிகையார்க்கு
மீனுயர்த்தவன்மருங்குதான்மீளுமோ நினைந்ததுமிகையென்றான். (௨௦௧)

இலக்கணங்களுஞ்சிலவுளவென்னினு மெல்லைசென்றிருக்கில்லா
அலக்கணெய்துவதணியதுண்டென்றெடுத் தறைகுவதிவள்யாக்கை
மலர்க்கருங்குழல்சோர்ந்துவாய்வெரீஇச் சிலமாற்றங்கள்பறைகின்றாள்
உலக்குமிக்கிவள்கணவனுமழிவுமிவ் வியனகர்க்குளதென்றான். (௨௦௨)

என்றுணர்ந்துநின்றேமுறுமிந்நிலை நிற்கவித்திறனென்னாப்
பின்றுசிந்தையன்பெயர்ந்தனனெடுமனை பிற்படப்பெருமேருக்
குன்றுகுன்றியதகையுறவோங்கிய கொற்றமாளிகைதன்னில்
சென்றுபுக்கனனிராவணற்கெடுப்பருங் கிரியெனத்திரடோளான். (௨௦௩)

நிலந்துடித்தனநெடுவரைபொடித்தன நிருதர்தங்குலமாதர்
பொலந்துடிக்கமைமருங்குல்போற்கண்களும் புருவமும்பொற்றோளும்
வலந்துடித்தனமாதிரந்துடித்தன தடித்தின்றிமதிவானம்
கலந்திடித்தனவெடித்தனபூரண மங்கலகலசங்கள். (௨௦௪)

புக்குநின்றுதன்புலன்கொடுநோக்கினன் பொருவருந்திருவுள்ளம்
நெக்குநின்றனனீங்குமந்தோவிந்த நெடுநகர்த்திருவென்று
எக்குலங்களின்யாவரோயாயினு மிருவினையெல்லோர்க்கும்
ஒக்குமூழ்முறையல்லதுவலியதொன் றில்லெனவுணர்வுற்றான். (௨௦௫)

நூற்பெருங்கடனுணங்கியகேள்விய னோக்கினனியனென்றாள்
வேற்பெருங்கடல்புடைபரந்தீண்டிய வெள்ளிடைவியன்கோயில்
பாற்பெருங்கடற்பன்மணிப்பஃறிரைப் பரப்புடைப்படர்வேலை
மாற்பெருங்கடல்வதிந்ததேயனையதோர் வளப்பினன்றுயில்வானை. (௨௦௬)

குழவிஞாயிறுகுன்றிவர்ந்தனையன குருமணிநெடுமோலி
இழைகளோடுநின்றிளவெயிலெறித்திட விரவெனும்பொருள்வீய
முழைகொண்மேருவின்பொகுட்டிடைக் கனகனைமுருக்கியமுரட்சீயம்
தழைகொடோளொடுதலைபலபரப்பிமுன் றுயில்வதோர்தகையானை. (௨௦௭)

ஆயபொற்கலத்தாய்வலையரம்பை யராயிரரணிநின்று
தூயபொற்கவரித்திரளியக்கிடச் சுழிபடுபசுங்காற்றின்
வீயகற்பகத்தேற்றுளிவிராயன வீழ்தொறுநெடுமேனி
தீயநற்றொடிச்சீதையைநினைதொறு முயிர்த்துயிர்தேய்வானை. (௨௦௮)

குழந்தைவெண்மதிக்குடுமியநெடுவரை குலுக்கியகுலத்தோளைக்
கழிந்துபுக்கிடைகரந்தனவநங்கன்வெங் கடுங்கணைபலபாய
உழந்தவெஞ்சமத்துயர்திசையானையி னொளிமருப்புற்றிற்ற
பழந்தழும்பினுக்கிடையிடையேசில பசும்புண்களசும்பூற. (௨௦௯)

சாந்தளாவியகலவைமேற்றவழ்வுறு தண்டமிழ்ப்பசுந்தென்றல்
ஏர்ந்தகாமவெங்கனலினுக்குமிழதட் டுருத்தியினுயிர்ப்பேறக்
காந்தண்மெல்விரற்சனகிமேன்மனமுதற் கரணங்கள்கடிதோடப்
பாந்தணீங்கியமுழையெனக்குழைவுறு நெஞ்சுபாழ்பட்டானை (௨௧௦)

### வேறு.

கொண்டபேருற்கமூளத் திசைதொறுங்குறித்துமேனாள்
மண்டியசெருவின்வீரத் தோள்களால்வாரிவாரி
உண்டதுதெவிட்டிப்பேழ்வாய்க் கடைகடோறொழுகிப்பாயும்
அண்டர்தம்புகழிற்றோன்றும் வெள்ளெயிற்றமைதியானை (௨௧௧)

வெள்ளிவெண்சேக்கைவெந்து பொறியெழவெதும்புமேனி
புள்ளிவெண்மொக்குளென்னப் பொடித்துவேர்கொதித்துப்பொங்கக்
கள்ளவிழ்மாலைத்தும்பி வண்டொடுங்கரிந்துசாம்ப
ஒள்ளிணர்மாலைதீய வுயிர்க்கின்றவுயிர்ப்பினானை. (௨௧௨)

தேவியனேழியாளிற் சிந்தைமெய்த்திருவினைகப்
பூவியலமளிமேலாப் பொய்யுறக்குறங்குவானைக்
காவியங்கண்ணிதன்பாற் கண்ணியகாதனீரின்
ஆவியையுயிர்ப்பென்றோது மம்மியிட்டணைக்கின்றானை. (௨௧௩)

மிகுந்தகைநினைட்புழற்ற வுருவெளிப்பட்டவேலை
நகுந்தகைமுகத்தன்காத னடுக்குறுமெய்யன்வார்தேன்
உகுந்தகைமொழியாண்முன்ன மொருவகையுறையுளுள்ளே
புகுந்தனளன்றேவென்று மயிர்புறம்பொடிக்கின்றானை. (௨௧௪)

மென்றொழிற்கலாபமஞ்ஞை வேட்கைமீக்கூருமேனும்
குன்றொழித்தொருமாக்குன்றி னரிதிற்சேர்கொள்கைபோல
வன்றொழிற்கொற்றப்பொற்றோண் மணந்தருமயிலேயன்னார்
ஒன்றொழித்தொன்றினேக வரியதோரொழுக்கினானை. (௨௧௫)

### வேறு.

தழுவாநின்றகருங்கடன்மீது தயகிரியிற்சுடர்தயங்க
எழுவானென்னமின்னிமைக்கு மாரம்புரளுமியல்பிற்றாய்
முழுவானவராயுலகமொரு மூன்றுங்காக்குமுதற்றேவர்
மழுவாணேமிகுலிசத்தின் வாய்மைதுடைத்தமார்பானை (௨௧௬)

### வேறு.

தோடுழுதண்டார்வண்டுந் திசையானைமதந்துதைந்த வண்டுஞ்சுற்றி
மாடுழுதநறுங்கலவை வயக்களிற்றின்சிந்துரத்தை மாறுகொள்ளக்
கோடுழுதமார்பானைக் கொலையுழுதவடிவேலின் கொற்றமஞ்சித்
தாடொழுதபலகவேந்தர் முடியுழுததழும்பிருந்த சரணத்தானை. (௨௧௭)

### வேறு.

கொண்டதோருருவமாயன் குறளினுங்குறுகநின்றான்
திண்டலைபத்துந்தோள்களிருபதுந்தெரியநோக்கிக்
கண்டனன்காண்டலோடுங் கருத்தின்முன்காலச்செந்தீ
விண்டனகண்கள்கீண்டு வெடித்தனகீழுமேலும். (௨௧௮)

## தரவுக் கொச்சகக்கலிப்பா.

தோளாற்றலென்னாரு மேனிற்குஞ்சொல்லென்னும்
வாளாற்றகண்ணாளை வஞ்சித்தான்மணிமுடியென்
தாளாற்றலாலிடித்துத் தலைபத்துந்தகர்த்தென்றன்
ஆளாற்றல்காட்டேனா லடியேனாய்முடியேனே. (உகக)

நடித்துவாழ்தகைமையதோ வடிமைதானன்னாதலைப்
பிடித்தவாளரக்கனார்யான் கண்டும்பிழைப்பபோ
ஒடித்தவன்றோளனைத்துந் தலைபத்துமுதைத்துருட்டி
முடித்திவ்வூர்முடித்தான்மேன் முடிவதெலாமுடிந்தொழிக. (உஉ0)

என்றாக்கியெயிறுகடித் திருகரனும்பிசைந்தெழுந்து
நின்றாக்கியுணர்ந்துரைப்பா னேமியோன்பணியன்றால்
ஒன்றாக்கியொன்றிழைத்த லுணர்வுடைமைக்குரித்தன்றால்
பின்றாக்கினிதுசாலப் பிழையாகுமெனப்பெயர்ந்தான். (உஉக)

ஆலம்பார்த்துண்டவன்போ லாற்றலமைந்துளரெனினும்
சீலம்பார்க்குரியோர்க ளெண்ணாதுசெய்குபவோ
மூலம்பார்க்குறினுலகை முற்றுவிக்குமுறைதெரினும்
காலம்பார்த்திறைவேலை கடவாதகடலொத்தான். (உஉஉ)

இற்றைப்போர்ப்பெருஞ்சீற்ற மென்னோடுமுடிந்திடுக
கற்றைப்பூங்குழலாளைச் சிறைவைத்தகண்டகனை
முற்றப்போர்முடித்ததொரு குரங்கென்றான்மூலவீரன்
கொற்றப்போர்ச்சிலைத்தொழிற்குக் குறைவுண்டாமெனக்குறைந்தான். (உஉங)

அந்நிலையான்பெயர்ந்துரைப்பா னய்வளைக்கையணியிழையார்
இந்நிலையானுடன்றுயில்வா ருளரல்லரிவனிலையும்
புன்னிலையகாமத்தாற் புலர்கின்றநிலைபூவை
நன்னிலையினுளளென்னு நலனெனக்குநல்குமால். (உஉச)

என்றெண்ணியீண்டினியோர் பயனில்லையெனவிரையாக்
குன்றன்னதோளவன்றன் கோமனைபிற்படப்பெயர்ந்தான்
நின்றெண்ணியுன்னுவா னந்தோவிந்நெடுநகரம்
பொன்றுன்னுமணிப்பூணா ரிலனென்னப்பொருமுவான். (உஉரு)

கொன்றாளோகற்பழியாக் குலமகளைக்கொடுந்தொழிலால்
தின்றாளோவப்புறத்தே செறித்தாளோசிறையறியேன்
ஒன்றானுமுணரகிலேன் மீண்டினிப்போயென்னுரைக்கேன்
பொன்றாதபொழுதெனக்குக் கொடுந்துயரம்போகாதால். (உஉசு)

கண்டுவருமென்றிருக்குங் காகுத்தன்கவிகுலத்தோன்
கொண்டுவருமென்றிருக்கும் யானிழைத்தகோளிதுவால்
புண்டரிகநயனத்தான் பாலின்னம்போவேனோ
விண்டவரோடென்வீயா தியான்வாளாவிளிவேனோ. (உஉஎ)

கண்ணியநாள்கழிந்துளவாற் கண்டிலெனூற்கனங்குழையை
விண்ணடைதமென்றூலை யாண்டிருத்திவினைந்தயான்
எண்ணியதுமுடிக்ககிலேன் யான்முடியாதிருப்பேனோ
புண்ணியமென்றொருபொருளென் னுழைநின்றும்போயதால். (௨௨௮)

ஏழுநூறுசனைசூழ்ந் தெயில்கிடந்ததிவ்விலங்கை
வாழுமாமன்னுயிர்யான் காணுதமற்றில்லை
ஊழியான்பெருந்தேவி யொருவரையும்யான்காணேன்
ஆழிதாயிடராழியிடையே வீழ்ந்தழிகேனோ. (௨௨௯)

வல்லரக்கன்றனைப்பற்றி வாயாறுகுருதியுகக்
கல்லரக்குங்கரதலத்தாற் காட்டென்றுகாண்கேனோ
எல்லரக்குமயினுதிவே லிராவணனுமிவ்வூரும்
மெல்லரக்கினுருக்கியுக வெந்தழலால்வேய்கேனோ (௨௩௦)

வானவரோமுதலோரா வினவுவெனேல்வல்லரக்கன்
தானொருவனுளனாக வுரைசெய்யுந்தருக்கிலரால்
ஏனையர்களெங்குரைப்பா ரெவ்வண்ணந்தெரிகேனோ
ஊனழியநீங்காத வுயிர்சுமந்தவுணர்வில்லேன். (௨௩௧)

எருவைக்குமுதலாய சம்பாதியிலங்கையிலத்
திருவைக்கண்டனெனென்று னவனுரையுஞ்சிதைந்ததால்
கருவைக்குநெடுநகரைக் கடலிடையேகரையாதென்
உருவைக்கொண்டின்னமுநா னுளனாகியுழல்கேனோ. (௨௩௨)

வடித்தாய்பூங்குழலாளை வானறியமண்ணறியப்
பிடித்தானிவ்வடலரக்க னென்னுமாற்றம்பிழையாதால்
எடுத்தாழியிலங்கைதனை யிருங்கடலினிட்டிவனை
முடித்தாலேயான்முடிதன் முறைமன்றவென்றுணர்வான். (௨௩௩)

எள்ளுறையுமொழியாமல் யாண்டையுளுமுளனுய்த்தன்
உள்ளுறையுமழகனைப்போ லெம்மருங்குமுலாவினான்
புள்ளுறையுய்யானத்தை புறநோக்கியயல்போவான்
கள்ளுறையுமலர்ச்சோலை யயலொன்றுகண்ணுற்றான். (௨௩௪)

ஊர்தேடுபடலம் முற்றிற்று.

ஆ படலம் - ௨ - ஐ திருவிருத்தம் - ௩௱௩௰.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## ௩ - ஆவது காட்சிப்படலம்.

கலிநிலைத்துறை.

மாடுநின்றவம் மணிமலர்ச்சோலையைமருவித்
தேடியவ்வழிக் காண்பெனேற்றீருமென்சிறுமை

ஊடுகண்டிலெ னெனிற்பின்னருரியதொன்றில்லை
வீடுவேன்மற்றிவ் விலங்கன்மேலிலங்கையைவீட்டி (௧)

என்றுசோலைபுக் கெய்தினனிராகவன்றூதன்
ஒன்றிவானவர் பூமழைசொரிந்தனருவந்தார்
அன்றவாளரக் கன்சிறையவ்வழிவைத்த
துன்றலோதிதன் னிலையினைச்சொல்லுவான்றுணிந்தாம் (௨)

வன்மருங்குல்வா ளரக்கியர்நெருக்கவங்கிருந்தாள்
கன்மருங்கெழுந் தென்றுமோர்துளிவரக்காணு
நன்மருந்துபோ னலனறவுணங்கியநங்கை
மென்மருங்குல்போல் வேறுளவங்கமுமெலிந்தாள். (௩)

துயிலெனக்கண்க ளிமைத்தலுமுகிழ்த்தலுந்துறந்தாள்
வெயிலிடைத்தந்த விளக்கெனவொளியிலாமெய்யாள்
மயிலியற்குயின் மழலையாண்மானிளம்பேடை
அயிலெயிற்றுவெம் புலிக்குழாத்தகப்பட்டதன்னாள். (௪)

விழுதல்விம்முதன் மெய்யுறவெதும்புதல்வெருவல்
எழுதலேங்குத லிரங்குதலிராமனையெண்ணித்
தொழுதல்சோருத றுளங்குதறுயருழந்துயிர்த்தல்
அழுதலன்றிமற் றயலொன்றுஞ்செய்குவதறியாள். (௫)

தழைத்தபொன்முலைத் தடங்கடந்தருவிபோய்த்தாழப்
புழைத்தபோலநீர் நிரந்தரம்பொழிகின்றபொலிவால்
இழைக்குநுண்ணிய மருங்குலாளிணைநெடுங்கண்கள்
மழைக்கணென்பது காரணக்குறியெனவகுத்தாள். (௬)

அரியமஞ்சினோ டஞ்சனமுதலிவையதிகம்
கரியகாண்டலுங் கண்ணினீர்கடல்புகக்கலுழ்வாள்
உரியகாதலி னொருவரோடொருவரையுலகில்
பிரிவெனுந்துய ருருவுகொண்டாலனபிணியாள் (௭)

துப்பினாற்செய்த கைகொடுகால்பெற்றதுளிமஞ்
சொப்பினான்றனை நினைதொறுநெடுங்கண்களுகுத்த
அப்பினானனைந் தருந்துயருயிர்ப்புடையாக்கை
வெப்பினாற்புலர்ந் தொருநிலையுறாதமென்றுகிலாள். (௮)

அரிதுபோகவோ விதிவலிகடத்தலென்றஞ்சிப்
பரிதிவானவன் குலத்தையும்பழியையும்பாராச்
சுருதிநாயகன் வரும்வருமென்பதோர்துணிவால்
கருதிமாதிர மனைத்தையுமளக்கின்றகண்ணாள். (௯)

கமையினாடிரு முகத்தயல்கதுப்புறக்கவ்விச்
சுமையுடைக்கற்றை நிலத்திடைக்கிடந்ததுமதியை

அமையவாயிற்பெய் துமிழ்கின்றவயிலெயிற்றரவிற்
குமையுறத்திரண் டொருசடையாகியகுழலாள். (கo)

ஆவியந்துகில் புனைவதொன்றன்றிவேறறியாள்
தூவியன்னமென் புனலிடைத்தோய்கிலாமெய்யாள்
தேவுதென்கட லமிழ்துகொண்டநங்கவேள்செய்த
ஓவியம்புகை யுண்டதேயொக்கின்றவுருவாள் (கக)

கண்டிலன்கொலா மிளவலுங்கனைகடனடுவண்
உண்டிலங்கையென் றுணர்ந்திலருலகெலாமொறுப்பான்
கொண்டிறந்தமை யறிகிலராமெனக்குழையாப்
புண்டிறந்ததி னெரிநுழைந்தாலெனப்புகைவாள். (கஉ)

மாண்டுபோயின னெருவைகட்கரசன்மன்மற்றோர்
யாண்டையென்னிலை யறிவுறுப்பார்களிப்பிறப்பில்
காண்டலோவரி தென்றென்றுவிம்முறுங்கலங்கும்
மீண்டுமீண்டுபுக் கெரிநுழைந்தாலெனமெலிவாள். (கங)

என்னைநாயக னிளவலையெண்ணலாவினையேன்
சொன்னவார்த்தைகேட் டறிவிலளெனத்துறந்தானோ
முன்னைமூழ்வினை முடிந்ததோவென்றென்றுமுறையால்
பன்னவாய்புலர்ந் துணர்வுதேய்ந்தாருயிர்பதைப்பாள். (கச)

அருந்துமெல்லட காரிடவருந்துமென்றழுங்கும்
விருந்துகண்டபோ தென்னுறுமோவென்றுவிம்மும்
மருந்துமுண்டுகொல் யான்கொண்டநோய்க்கென்றுமயங்கும்
இருந்தமாநிலஞ் செல்லரித்திடவுமாண்டெழாதாள். (கரு)

வன்கண்வஞ்சனை யரக்கரித்துணைப்பகல்வையார்
தின்பரொன்னினிச் செயத்தக்கதென்றுதீர்ந்தானோ
தன்குலப்பொறை தன்பொறையெனத்தணிந்தானோ
என்கொலெண்ணுவே னென்னுமங்கிராப்பகலில்லாள். (கசு)

பெற்றதாயருந் தம்பியும்பெயர்த்தும்வந்தெய்திக்
கொற்றமாநகர் கொண்டிறந்தார்களோகுறித்துச்
சொற்றவாண்டெலா முறைந்தன்றியநகர்துன்னான்
உற்றதுண்டெனப் படருழந்துருதநோயுறுவாள். (கஎ)

முரனெனத்தகு மொய்ம்பினோர்முன்பொருதவர்போல்
வரனுமாயமும் வஞ்சமும்வரம்பிலவல்லார்
பொரமிகழ்ந்ததோர் பூசலுண்டாமெனப்பொருமாக்
கரனெதிர்ந்தது கண்டனளாமெனக்கவல்வாள். (கஅ)

கலிவிருத்தம்.

தெம்மடங்கிய சேணிலங்கைகயர்
தம்மடந்தையுந் தம்பியதாமென

ரூம்மடங்கு பொலிந்தமுகத்தினன்
வெம்மடங்கலை யுன்னிவெதும்புவாள். (க௯)

நெய்த்திருப்பத மேவென்றபோதினும்
இத்திருத்துறந் தேகென்றபோதினும்
சித்திரத்தி னலர்ந்தசெந்தாமரை
ஒத்திருக்கு முகத்தினையுன்னுவாள். (௨௰)

தேங்குகங்கைத் திருமுடிச்செங்கணன்
வாங்குகோல வடவரைவார்சிலை
ஏங்குமாத்திரத் திற்றிரண்டாய்விழ
வீங்குதோளை நினைந்துமெலிந்துளாள். (௨௧)

இன்னலம்பர வேந்தற்கியற்றிய
பன்னலம்பதி னாலாயிரம்படை
கன்னன்மூன்றிற் களப்படக்கால்வளை
வின்னலம்புகழ்ந் தேத்திவெதும்புவாள். (௨௨)

ஆழநீர்க்கங்கை யம்பிகடாவிய
ஏழைவேடனுக் கெம்பிநின்றம்பிநீ
தோழன்மங்கை கொழுந்தியெனச்சொன்ன
வாழிநண்பினை யுன்னிமயங்குவாள். (௨௩)

மெய்த்ததாதை விரும்பினனீட்டிய
கைத்தலங்களைக் கைகளினீக்கிவே
றுய்த்தபோது தருப்பையிலுண்பதம்
வைத்தவேதிகைச் செய்திமனக்கொள்வாள். (௨௪)

உரங்கொடேமலர்ச் சென்னியுரிமைசால்
வரங்கொள்பொன்முடி தம்பிவனைந்திலன்
திரங்குசெஞ்சடை கட்டியசெய்வினைக்
கிரங்கியேங்குவ தெண்ணியிரங்குவாள். (௨௫)

பரித்தசெல்வ மொழியப்படருநாள்
அருத்திவேதியர்க் கான்குலமீந்தவர்
கருத்தினாசைக் கரையின்மைகண்டிறை
சிரித்தசெய்கை நினைந்தழுஞ்செய்கையாள். (௨௬)

மழுவின்வாளினன் மன்னரைமூவெழு
பொழுதினூறிப் புலவுறுபுண்ணினீர்
முழுகினான்றவ மொய்ம்பொடுமீறிவில்
தழுவுமேன்மை நினைந்துயிர்சாம்புவாள். (௨௭)

ஏகவாளியவ் விந்திரன்காதலன்மேல்
போகவேவி யதுகண்பொடித்தநாள்

காகமுற்றுமோர் கண்ணிலவாக்கிய
வேகவென்றியைத் தன்றலைமேற்கொள்வான். (௨௮)

வெவ்விராதனை மேல்வருந்தீவினை
வவ்விமாற்றருஞ் சாபமுமாற்றிய
அவ்விராமனை யுன்னித்தன்னுருயிர்
செவ்விராதுணர் வோய்ந்துடனேம்புவான். (௨௯)

வேறு.

இருந்தனடிரிசடை யென்னுமின்சொலின்
திருந்தினளொழிய மற்றிருந்ததீவினை
அருந்திறலரக்கிய ரல்லுகள்ளுறப்
பொருந்தலுந்துயினறைக் களிபொருந்தினர். (௩0)

ஆயிடைத்திரிசடை யென்னுமன்பினள்
தாயினுமினியவ டன்னைநோக்கினள்
தூயைநீகேட்டியென் றுன்னவியாமெனு
மேயதோர்கட்டுரை விளம்பன்மேயினள். (௩௧)

நலந்துடிக்கின்றதோ நான்செய்தீவினைச்
சலந்துடித்தின்னமுந் தருவதுண்மையோ
பொலந்துடிமருங்குலாய் புருவங்கண்முதல்
வலந்துடிக்கின்றில வருவதோர்கிலேன். (௩௨)

முனியொடுமிதிலையின் முதல்வன்முந்துநாள்
துனியறுபுருவமுந் தோளுநாட்டமும்
இனியனதுடித்தன வீண்டுமாண்டென
நனிதுடிக்கின்றன வாய்ந்துநல்குவாய் (௩௩)

மறந்தனெனிதுவுமோர் மாற்றங்கேட்டியால்
அறந்தருசிந்தையென் னுவிநாயகன்
பிறந்தபார்முழுவதுந் தம்பியேபெறத்
துறந்துகான்புகுந்தநாள் வலந்துடித்ததே (௩௪)

நஞ்சனையான்வனத் திழைக்குநாளிடை
வஞ்சனையால்வலந் துடித்தவாய்மையால்
எஞ்சலவீண்டுதா மிடந்துடித்ததால்
அஞ்சலென்றிரங்குதற் கடுப்பதியாதென்றாள். (௩௫)

என்றலுந்திரிசடை யியைந்தசோபனம்
நன்றிதுநன்றெனு நயந்தசிந்தையாள்
உன்றுணைக்கணவனை யுறுதலுண்மையால்
அன்றியுங்கேட்டியென் றறைதன்மேயினள். (௩௬)

உன்னிறம்பசப்புற வுயிருயிர்ப்புற
இன்னிறத்தேனிசை யினியநண்பினால்

மின்னிறமருங்குலாய் செவியின்மெல்லெனப்
பொன்னிறத்தும்பிவந் தூதிப்போயதால். (௩௭)

ஆயதுதேரினுன் னாவிநாயகன்
ஏயதுதூதுவந் தெதிர்தலுண்மையால்
தீயதுதீயவர்க் கெய்தறிண்ணமென்
வாயதுகேளென மறித்துங்கூறுவாள். (௩௮)

துயிலிலவாதலிற் கனவுதோன்றல
அயில்விழியொருகன வமைந்துநோக்கினேன்
பயில்வனபழுதில பழுதிறுடென
வெயிலினுமெய்யன வுரைத்தன்மேயினாள். (௩௯)

எண்ணெய்பொன்முடி தொறுமிழுகியீறிலாத்
திண்ணெடுங்கழுதைபேய் பூண்டதேரின்மேல்
அண்ணலவ்விராவண னரத்தவாடையன்
நண்ணினன்றென்புல னவையில்கற்பினாய். (௪0)

மக்களுஞ்சுற்றமு மற்றுளோர்களும்
புக்கனரப்புலம் போந்ததில்லையால்
சிக்கறநோக்கினென் நீயவின்னமும்
மிக்கனகேட்கென விளம்பன்மேயினாள். (௪௧)

ஆண்டகையிராவணன் வளர்க்குமவ்வனம்
ஈண்டனவிறந்தவா லினங்கொள்செஞ்சிகை
தூண்டருமணிவிளக் கழலுந்தொன்மனை
கீண்டதால்வானவே றெறியக்கிளைநாள். (௪௨)

பிடிமதம்பிறந்தன பிறங்குபேரியும்
இடியெனமுழங்குமா லிட்டலின்றியே
தடியுடைமுகிற்குல மின்றித்தாவில்வான்
வெடிபடவதிருமா லுதிருமீனெலாம். (௪௩)

விற்பகலின்றியே யிரவுவிண்டற
எற்பகவெரிந்துள தென்னத்தோன்றுமால்
மற்பகமலர்ந்ததோண் மைந்தர்சூடிய
கற்பகமாலையும் புலவுகாலுமால். (௪௪)

திரியுமாலிலங்கையு மதிலுந்திக்கெலாம்
எரியுமாற்கந்தர்ப்ப நகரமெங்கணும்
தெரியுமான்மங்கல கலசஞ்சிந்தின
விரியுமால்விளக்கினை விழுங்குமாலிருள். (௪௫)

தோரணமுறிந்தன துணியச்சூழிமால்
வாரணமுறியுமால் வலத்தவாண்மருப்

பாரணமந்திரத் தறிஞர்நாட்டிய
பூரணகுடத்துநீர் நறவுபொங்குமால். (௪௬)

விண்டொடர்மதியினைப் பிளந்துமீனெழும்
புண்டொடர்குருதியிற் பொழியும்போர்மழை
தண்டொடுதிகிரிவா டனுவென்றின்னன
மண்டமர்புரியுமா லாழிமாறற. (௪௭)

மங்கையர்மங்கலத் தாலிமற்றையோர்
அங்கையின்வாங்கின ரெவருமன்றியே
கொங்கையின்வீழ்ந்தன குறித்தவாற்றினால்
இங்கிதனற்புத மின்னுங்கேட்டியால். (௪௮)

மன்னவன்றேவியம் மயன்மடந்தைதன்
பின்னவிழோதியும் பிறங்கிவீழ்ந்தன
துன்னிருஞ்சுடர்சுடச் சுறுக்கொண்டேறின
இன்னலுண்டெனுமிதற் கேதுவீதெனா. (௪௯)

என்றனளியம்பிவே றிசைப்பக்கேட்டியால்
இன்றிவணிப்பொழு தியைந்ததோர்கனா
வன்றுணைக்கோளரி யிரண்டுமாறிலாக்
குன்றிடையுழுவையங் குழுக்கொண்டண்டியே. (௫௦)

வரம்பிலாமதகரி யுறையுமவ்வனம்
நிரம்புறவளர்ந்தன நெருக்கிநேர்ந்தன
குரம்பறுபிணம்படக் கொன்றமாறிலாப்
புரம்புகவிருந்ததோர் மயிலும்போயதால். (௫௧)

ஆயிரந்திருவிளக் கமையமாட்டிய
சேயொளிவிளக்கதொன் றேந்திச்செய்யவள்
நாயகன்றிருமனை நின்றுநண்ணுதல்
மேயினள்வீடணன் கோயின்மென்சொலாய். (௫௨)

பொன்மனைபுக்கவப் பொருவில்போழ்தினில்
என்னைநீயுணர்த்தினை முடிந்ததில்லென
அன்னையேயதன்றுறை காணெனாயிழை
இன்னமுந்துயில்கென விருகைகூப்பினாள். (௫௩)

இவ்விடையண்ணலவ் விராமனேவிய
வெவ்விடையனையபோர் வீரத்தூதனும்
அவ்விடையெய்தின னரிதினோக்குவான்
றொவ்விடைமடந்தைதன் னிருக்கைநோக்கினான். (௫௪)

அவ்வயினரக்கிய ரறிவுற்றம்மவோர்
செவ்வையிறுயிலமைச் செகுத்ததீதெனா

எவ்வயின் மருங்கினு மெழுந்தவிங்கினார்
வெவ்வயின்மழுவெழுச் சூலவெங்கையார். (ருரு)

வயிற்றிடைவாயினர் வளைந்தநெற்றியின்
குயிற்றியவிழியினர் கொடியநோக்கினர்
எயிற்றினுக்கிடையிடை யானையாளிபேய்
துயிற்கொள்வெம்பில னெனத்தொட்டவாயினர். (ருசு)

ஒருபதுகையின னொற்றைச்சென்னியர்
இருபதுதலையின ரிரண்டுகையினர்
வெருவருதோற்றத்தர் விகடவேடத்தர்
பருவரையெனமுலை பலவுநாற்றினர். (ருஎ)

சூலம்வாள்சக்கரந் தோட்டிதோமரம்
காலவேல்கற்பணங் கற்றகையினர்
ஆலமேயுருவுகொண் டனையமேனியர்
வாலமேதரித்தவன் வெருவும்வண்மையர். (ருஅ)

கரிபரிவேங்கைமாக் கரடியாளிபேய்
அரிநரிநாயென வணிமுகத்தினர்
வெரிநுறுமுகத்தினர் விழிகண்மூன்றினர்
புரிதருகொடுமையர் புகையும்வாயினர். (ருகூ)

எண்ணினுக்களவிட லரியவீட்டினர்
கண்ணினுக்களவிட லரியகாட்சியர்
பெண்ணெனப்பெயர்கொடு திரியும்பெற்றியர்
துண்ணெனத்துயிலுணர்ந் தெழுந்துசுற்றினர் (சுo)

ஆயிடையுளாயழிந் தழகன்றேவியும்
தீயினையவர்முக நோக்கித்தேம்பினாள்
நாயகன்றூதனும் விளாவினண்ணினான்
ஓய்விலதுயர்மரப் பணையினும்பரான். (சுக)

அரக்கியரயின்முத லேந்துமங்கையர்
நெருக்கியகுழுவினர் துயிலுநீங்கினர்
இருக்குநர்பலரிதற் கேதுவென்னெனாப்
பொருக்கெனவவரிடைப் பொருந்தநோக்கினான். (சுஉ)

விரிமழைக்குலங்கிழித் தொளிருமின்னெனக்
கருநிறத்தரக்கியர் குழுவிற்கண்டனன்
உருநிறத்தொருதனிக் கொண்டலூழியான்
இருநிறத்துற்றவெற் றியைந்தகாந்தத்தை. (சுந)

தொடற்கருமரக்கியர் காவல்சுற்றுளாள்
மடக்கொடிச்சீதையா மாதரோகொலாம்

கடற்றுணைநெடியதன் கண்ணினீர்ப்பெருந்
தடத்திடையிருந்ததோ ரன்னத்தன்மையாள். (௬௪)

வீடினதன்றறன் யானும்வீகலேன்
தேடினேன்கண்டனென் றேவியேயெனு
ஆடினன்பாடின னாண்டுமீண்டும்பாய்ந்
தோடினனுலாவின னுவகைத்தேனுண்டான். (௬௫)

எள்ளருமுருவினவ் விலக்கணங்களும்
வள்ளறன்னுரையொடு மாறுகொண்டிலள்
கள்ளவாளரக்கனற் கமலக்கண்ணனூர்
உள்ளுறையுயிரினை யொளித்துவைத்தவா. (௬௬)

மூவகையுலகையு முறையினீக்கிய
பாவிதன்னுயிர்கொள்வா னிழைத்தபண்பிதால்
ஆவதேயையமி லரவினீங்கிய
தேவனேயவனிவள் கமலச்செல்வியே. (௬௭)

மாசுண்டமணியனாள் வயங்குவெங்கதிர்த்
தேசுண்டதிங்களு மென்னத்தேய்ந்துளாள்
காசுண்டகூந்தலாள் கற்புங்காவலும்
ஏசுண்டதில்லையா லறத்துக்கீறுண்டோ. (௬௮)

புனைகழலிராகவன் புயத்தையோபுகழ்
வனிதையர்திலகத்தின் மனத்தின்மாண்பையோ
வினைகழலரக்கரின் வன்மைவீக்கிடும்
சனகர்தங்குலத்தையோ யாதைச்சாற்றுகேன். (௬௯)

தேவரும்பிழைத்திலர் தெய்வவேதியர்
ஏவரும்பிழைத்தில ரறமுமீறின்றால்
யாவதிங்கினிச்செய லரியதெம்பிராற்
காவவென்னடிமையும் பிழைத்தின்றுமன்றே. (௭0)

கேழிலாணிறையிறை கீண்டதாமெனின்
ஆழியான்முனிவெனு மாழிமீக்கொள
ஊழியினிறுதிவந் துறுமென்றுன்னினேன்
வாழியநலமினி வரம்பிலுனெலாம். (௭௧)

வெங்கனன்முழுகியும் புலன்கள்வீக்கியும்
நுங்குவவருந்தவ நீக்கிநோற்றவர்
எங்குளர்குலத்தில்வர் தில்லின்மாண்புடை
நங்கையர்மனத்தவ நவிலற்பாலதே. (௭௨)

பேணநோற்றதுமனைப் பிறவிபெண்மைபோல்
நாணநோற்றுயர்ந்தது நங்கைதோன்றலால்

மாணநோற்றீண்டிவ ணிருந்தவாறெலாம்
காணநோற்றிலனவன் கமலக்கண்களால். (எங)

முனிபவராக்கியர் முறையினிங்கினர்
இனியவடானலா தியாருமில்லையால்
தனிமையும்பெண்மையுந் தவமுமின்னவே
வனிதையர்க்காகநல் லறத்தின்மாண்பெலாம். (எச)

தருமமேகாத்ததோ சழக்கன்றன்வினைக்
கருமமேகாத்ததோ கற்பின்காவலோ
அருமையேயருமையே யாரிதாற்றுவார்
ஒருமையேயெம்மனோர்க் குரைக்கற்பாலதே. (எரு)

செல்வமோர்வுதுவவர் தீமையோவிது
அல்லினும்பகலினு மமரராட்செய்வார்
ஒல்லுமோவொருவர்க்கீ துறுகண்யாதினி
வெல்லுமேதீவினை யறத்தைமெய்ம்மையால். (எசு)

என்றினையினையன வெண்ணிவண்ணவான்
பொன்றிணிநெடுமரப் பொதும்பர்புக்கவண்
நின்றனனவ்வழி நிகழ்ந்ததென்னெனின்
துன்றுபூஞ்சோலைவா யரக்கன்றோன்றினன். (எஎ)

காட்சிப்படல முற்றிற்று.

ஆ படலம் - ௩ - இ திருவிருத்தம் - சாஎ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

---

## ச - ஆவது நிந்தனைப்படலம்

### எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சிகரவண்குடுமி நெடுவரையெவையு மொருவழித்திரண்டனசிவண
மகரிகைவயிர குண்டலமலம்புந் திண்டிறற்றோள்புடைவயங்கச்
சகரவேலையினீர் தழுவியகதிரிற் றலைதொறுந்தலைதொறுந்தயங்கும்
வகையபன்மகுட மின்வெயிலெறிப்பக் கங்குலும்பகல்படவந்தான். (க)

உருப்பசியுடைவா ளெடுத்தனடொடர மேநகைவெள்ளடையுதவச்
செருப்பினைத்தாங்கித் திலோத்தமைசெல்ல வரம்பையர்குழாம்புடைசுற்றக்
கருப்புரஞ்சாந்துங் கலவையுமலருங் கலந்துமிழ்பரிமளகந்தம்
மருப்புடைப்பொருப்போர் மாதிரக்களிற்றின் வரிக்கைவாண்மூக்கிடைமடுப்ப.

கானநெய்விளக்க நாலிருகோடி நங்கையரங்கையிலெடுப்ப
மேனிவந்தெழுந்த மணியுடையணியின் விரிகதிருளொலாம்விழுங்கக்
கான்முதற்றொடர்ந்த நூபுரஞ்சிலம்பக் கிண்கிணிகலையொடுங்கலிப்பப்
பானிறத்தன்னக் குழாம்படர்ந்தென்னப் பற்பலமழலையும்பகர. (௩)

அந்தரம்புகுந்த தண்டெனமுனிவுற் றருந்துயினீங்கினுண்டைச்
சந்திரவதனத் தருந்ததியிருந்த தண்ணறுஞ்சோலையின் றனையோ
மந்திரம்யாதோ யாரொடும்போமோ வென்றுமாமனமறுக்குறலால்
இந்திரன்முதலோ ரிமைப்பிலாநாட்ட முகிழ்த்தனருயிர்ப்பவிந்திருப்ப. (ச)

நீனிறக்குன்றி னெடிதினிற்றாழ்ந்த நீத்தவெள்ளருவியினிமிர்ந்த
பானிறப்பட்டின் மாலையுத்தரியம் பண்புறப்பசும்பொனாரத்தின்
* மானிறப்புடவி யுடையுறப்பரந்த வளர்கதிரிளவெயில்பொருவச்
சூனிறக்கொண்மூக் கிழித்திடைதுடிக்கு மின்னெனமார்பினாறலங்க. (ரு)

தோடொறுந்தொடர்ந்த மகரிகைவயிரக் கிம்புரிவலயமாச்சுடர்கள்
நாடொறுஞ்சுடரும் கலிகெழுவிசும்பி னாளொடுகோளினைநக்கத்
தாடொறுந்தொடர்ந்த தழங்குபொற்கழலின் றகையொளிநெடுநிலந்தடவக்
கேடொறுந்தொடர்ந்த முறுவல்வெண்ணிலவின் முகமலரிரவினுங்கிளர. (சு)

தன்னிறத்தோடு மாறுதந்திமைக்கு நீவியந்தழைபடவுடுத்த
பொன்னிறத்துகில் கருவரைமருங்கிற் றழுவியபுதுவெயில்பொருவ
மின்னிறக்கதிரிற் சுற்றியபசும்பொன் விரற்றலையவிரொளிக்காசின்
கன்னிறக்கற்றை நெடுநிழல்பூத்த கற்பகமுழுவனங்கவின. (எ)

சன்னவீரத்த கோவைவெண்டார மூழியினிறுதியிற்றனித்த
பொன்னெடுவரையிற் றோற்றியகோளு நாளுமொத்திடையிடைபொலிய
மின்னொளிமௌலி யுதயமால்வரையின் மீப்படர்வெங்கதிர்ச்செல்வர்
பன்னிருவரினு மிருவரைத்தவிர்வுற் றுதித்ததோர்படியொளிபரப்ப. (அ)

பயிலெயிற்றிரட்டைப் பணைமருப்பொடியப் படியினிற்பரிபவஞ்சுமந்த
மயிலடித்தொழுக்கி னளையமாமதத்த மாதிரக்காவன்மால்யானை
கயிலையிற்றிரண்ட முரண்டொடர்தடந்தோட் கனகனதுயர்வரங்கடந்த
அயிலெயிற்றரியின் சுவடுதன்கரத்தா லளைந்தமாக்கரியினின்றஞ்ச. (க)

அங்கயற்கருங்க ணியக்கியர்துயக்கி லரம்பையர் விஞ்சையர்க்கமைந்த
மங்கையர்நாக மடந்தையர்சித்தர் நாரியரரக்கியர்முதலாக்
குங்குமக்கொங்கைக் குவிமுலைக்கனிவாய்க் கோகிலந்துயர்ந்தமென்குதலை
மங்கையரீட்ட மால்வரைதழீஇய மஞ்ஞையங்குழுவெனமயங்க. (க0)

தொளையுறுபுழைவேய்த் தூக்கிசைக்கானந் துயல்வுறுவொருநிலைபடர
இளையவர்மிடறு மிந்நிலையிசைப்பக் கிந்நரர்முறைநிறுத்தெடுத்த
கிளையுறுபாடல் சில்லரிப்பாண்டி றழுவியமுழவொடுகெழுமி
அளையுறுமரவு மமுதுவாயுகுப்ப வண்டமும்வையமுமளப்ப. (கக)

அன்னபூஞ்சதுக்கஞ் சாமரையுக்க மாதியாம்வரிசையிற்கமைந்த
உன்னரும்பொன்னின் மணியினிற்புனைந்த விழைக்குலமுழைக்குலமனைய
மின்னிடைச்செவ்வாய்க் குவிமுலைப்பணைத்தோள் வீங்குதேரல்குலார்தாங்கி
நன்னிறக்காரின் வரவுகண்டுவக்கு நாடகமயிலெனநடப்ப. (கஉ)

---

* நிறப்புடவி - வலித்தல்விகாரம்.

தந்திரிநெறியிற் றாக்குறுகருவி தூக்கினொழுவிதச்சதியின்
முந்துறுகுணிலோ டியைவுறுகுறட்டிற் சில்லரிப்பாண்டிலின்முறையின்
மந்திரகீதத் திசைப்பதந்தொடர வகையுறுகட்டளைவழாமல்
அந்தரவானத் தரம்பையர்கரும்பிற் பாடலாரருகுவந்தகவ. (கங)

அந்தில்வேளநங்க ணழல்படத்துரந்த வயின்முகப்பகழிவாயறுத்த
வெந்துறுபுண்ணின் வேனுழைந்தாங்கு வெண்மதிப்பசுங்கதிர்விரவ
மந்தமாருதம்போய் மலர்தொறும்வாரி வயங்குநீர்மம்மரின்வருதேன்
சிந்துறுண்டுளியின் சீகரத்திவலை யுருக்கியசெம்பெனத்தெறிப்ப. (கச)

இலைபுனைமருங்கு லிறுமிறுமெனவு மிறுகலாவனமுலையிரட்டை
உழைபுகுசெப்பி னொளிதரமறைத்த வுத்தரியத்தினொல்கிக்
குழைபுகுகமலங் கோட்டினர்நோக்குங் குறுநகைக்குமுதவாய்மகளிர்
மழைபுனைதடங்கட் செங்கடையீட்ட மார்பினுந்தோளினுமலைய. (கரு)

மாலையுஞ்சாந்துங் கலவையும்பூணும் வயங்குறுண்டுசொடுகாசும்
சோலையின்றொழுதிக் கற்பகத்தருவு நிதிகளுங்கொண்டுபின்றொடரப்
பாலின்வெண்பரவைத் திரைகருங்கிரிமேற் பரந்தெனச்சாமரைபதைப்ப
வேலைநின்றுயரு முயலில்வெண்மதியின் வெண்குடைமீதுறவிளங்க. (கசு)

ஆர்தருமகழி யருவரையிலங்கை யடிபெயர்ந்திடுதொறுமழுந்தி
நேர்தரும்பரவைப் பிறழ்திரைதவழ்ந்து நெடுந்தடந்திசைதொறுமிரச்
சார்தருங்கடுவி னெயிறுடைப்பகுவா யநந்தனுந்தலைதடுமாற
மூரிநீராடை யிருநிலமடந்தை முதுகுளுக்குற்றனண்முரல. (கஎ)

கேடகத்தோடு மழுவெழுச்சூல மங்குசங்கற்பணங்கிடுகோ
டாடகச்சுடர்வா ளயில்சிலைகுலிச முதலியவாயுதமனைத்தும்
தாடகைக்கிரட்டி யெறுழ்வலிக்கமைந்த தகைமையர்தடவரைபொறுக்கும்
சூடகத்தடக்கைச் சுடுசினத்தடுபோ ரரக்கியர்தலைதொறுஞ்சுமப்ப. (கஅ)

விரிதளிர்முகைபூக் கொம்படைமுதல்வே ரிவையெலாமணிபொனால்விரிந்த
தருவுயர்சோலை திசைதொறுங்கரியத் தழலுமிழுயிர்ப்புமுன்றவழத்
திருமகளிருந்த திசையறிந்திருந் திகைப்புறுசிந்தையன்கெடுத்த
தொருமணிநெடும்பற் பஃறலையரவி னுழைதொறுமுழைதொறுமுலாவ (ககூ)

இனையதோர்தன்மை யெறுழ்வலியரக்க ரேந்தல்வந்தெய்துகின்றானை
அனையதோர்தன்மை யஞ்சனைச்சிறுவன் கண்டனனமைவுறநோக்கி
வினையமுஞ்செயலு மேல்விளைபொருளு மிவ்வழிவிளங்குமென்றெண்ணி
வனைகழலிராமன் பெரும்பெயரோதி யிருந்தனன்வந்தயன்மறைந்தே. (உ0)

ஆயிடையரக்க னரம்பையர்குழுவு மல்லவும்வேறயலகல
மேயினன்பெண்ணின் விளக்கெனுந்தகையா ளிருந்துழியாண்டவள்வெருவிப்
போயினவுயிர ளாமெனநடுங்கிப் பொறிவரியெறுழ்வலிப்புகைக்கட்
காய்சினவுழுவை தின்னியவந்த கலையிளம்பிணையெனக்கனாந்தாள் (உக)

## கலிவிருத்தம்.

கூசியாவி குலைவுறுவாளையும்
ஆசையாலுயி ராசழிவானையும்
காசில்கண்ணிணை சான்றெனக்கண்டனன்
ஊசலாடி யுளையுமுளத்தினான். (௨௨)

வாழிசானகி வாழியிராகவன்
வாழிநான்மறை வாழியரந்தணர்
வாழிநல்லற மென்றுறவாழ்த்தினான்
ஊழிதோறும் புதிதுறுங்கீர்த்தியான். (௨௩)

அவ்விடத்தரு கெய்தியரக்கன்றான்
எவ்விடத்தெனக் கின்னருளீவது
நொவ்விடைக்குயி லேறுவல்கென்றனன்
வெவ்விடத்தை யமிழ்தெனவேண்டுவான். (௨௪)

ஈசற்காயினு மீடழிவுற்றிறை
வாசிப்பாடழி யாதமனத்தினான்
ஆசைப்பாடுமந் நாணுமடர்த்திடக்
கூசிக்கூசி யிணையனகூறினான். (௨௫)

இன்றிறந்தன நாளையிறந்தன
என்றிறந்தருந் தன்மையிதாலெனைக்
கொன்றிறந்தபின் கூடுதியோகுழை
சென்றிறங்கி மறந்தருசெங்கணாய். (௨௬)

உலகமொன்றொ டிரண்டொருங்கோம்புமென்
அலகில்செல்வத் தரசியலாணையில்
திலகமேயுன் றிறத்தநங்கன்றரு
கலகமல்ல தெளிமையுங்காண்டியோ. (௨௭)

பூந்தண்வார்குழற் பொற்கொழுந்தேபுகழ்
ஏந்துசெல்வ மிகழ்ந்தனையின்னுயிர்க்
காந்தன்மாண்டிலன் காடுகடந்துபோய்
வாழ்ந்தவாழ்வது மானிடர்வாழ்வன்றே. (௨௮)

நோற்கின்றார்களு நுண்பொருணுண்ணிதின்
பார்க்கின்றாரும் பெறும்பயன்பார்த்தியேல்
வார்க்குன்றாமுலை யென்சொன்மௌலியால்
ஏற்கின்றாரொ டெனுறையின்பமால். (௨௯)

பொருளும்யாழும் விளரியும்பூவையும்
மருளுநாளு மழலைவழங்குவாய்
தெருளுநான்முகன் செய்ததன்சிந்தையின்
அருளுமின்மருங் கும்மரிதாக்கியோ. (௩௦)

ஈண்டுநாளு மிளமையுமீண்டில
மாண்டுமாண்டு பிறிதுறுமாலைய
வேண்டுநாள்வெறி தேவினிர்தாலினி
யாண்டுவாழவ் விடருழந்தாழ்தியோ. (௩௧)

இழவெனக்குயிர்க் கெய்தினுமெய்துக
குழைமுகத்துநின் சிந்தனைகோடினல்
பழகநிற்புறும் பண்பிவைகாமத்தோ
டழகினுக்கினி யாருளராவரோ. (௩௨)

பெண்மையும்மழ கும்பிறழாமனத்
திண்மையும்முதல் யாவையுஞ்செய்யவாய்க்
கண்மையும்பொருந் திக்கருணைப்படர்
வண்மையென்கொல் சனகரின்மாண்டவா. (௩௩)

வீட்டுங்காலத் தலறியமெய்க்குரல்
கேட்டுங்காண்டற் கிருத்திகொல்கின்னரீ
நாட்டுங்கானெடு நல்லறத்தின்பயன்
ஊட்டுங்காலத் திகழ்வதுறுங்கொலோ. (௩௪)

தக்கதென்னுயிர் வீடெனிற்றாழ்கிலா
தொக்கசெல்வ மூலையுமொருத்திநீ
புக்குயர்ந்த தெனும்புகழ்போக்கிவே
றுக்கதென்னு முறுபழிகோடியோ. (௩௫)

தேவர்தேவியர் சேவடிகைதொழும்
தாவின்மூவுல கின்றனிநாயகம்
மேவுகின்றது நுன்கண்விலக்கினை
யாவரோழையர் நின்னினிலங்கிழாய். (௩௬)

குடிமைமூன்றுல குஞ்செயுங்கொற்றத்தென்
அடிமைகோடி யருளுதியாலெனு
முடியின்மீது முகிழ்த்துயர்கையினன்
படியின்மேல்விழுந் தான்பழிபார்க்கலான். (௩௭)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

காய்ந்தனசலாகையன்ன வுரைவந்துகதுவாமுன்னம்
தீந்தனசெவிகளுள்ளந் திரிந்ததுசிவந்தசோரி
பாய்ந்தனகண்களொன்றும் பரிந்திலளுயிர்க்கும்பெண்மைக்
கேய்ந்தனவல்லாவெய்ய மாற்றங்களினையசொன்னாள். (௩௮)

மல்லடுதிரடோள்வஞ்சன் மனம்பிறிதாகும்வண்ணம்
கல்லொடுதொடர்ந்தநெஞ்சங் கற்பின்மேற்கண்டதுண்டோ
இல்லொடுதொடர்ந்தமாதர்க் கேய்வனவல்லவெய்ய
சொல்லிதுதெரியக்கேட்டி றுரும்பெனக்கன்றுசொன்னாள். (௩௯)

மேருவையுருவல்வேண்டின் விண்பிளந்தேகல்வேண்டின்
ஈரொழுபுவனம்யாவு முற்றுவித்திடுதல்வேண்டின்
ஆரியன்பகழிவல்ல தறிந்திருந்தறிவிலாதாய்
சீரியவல்லசொல்லித் தலைபத்துஞ்சிந்துவாயோ. (௪௰)

அஞ்சினையாதலானன் றூரியனற்றநோக்கி
வஞ்சனைமானென்றேவி மாயையான்மறைந்துவந்தாய்
உய்ஞ்சனைபோதியாகின் விடுதியுன்குலத்துக்கெல்லாம்
நஞ்சினையெதிர்ந்தபோது நோக்குமேனினதுநாட்டம் (௪௧)

பத்துளதலையுந்தோளும் பலபலபகழிதூவி
வித்தகவில்லினாற்குத் திருவிளையாடற்கேற்ற
சித்திரவிலக்கமாகு மல்லதுசெருவிலேற்கும்
சத்தியைபோலின்மேனாள் சடாயுவீற்றையின்வீழ்ந்தாய். (௪௨)

தோற்றனைபறவைக்கன்று துள்ளுநீர்வெள்ளஞ்சென்னி
ஏற்றவன்வாளால்வென்றா யன்றெனினிறந்தியன்றே
நோற்றநோன்புடையவாழ்நாள் வரமிவைதுனித்தவெல்லாம்
கூற்றினுக்கன்றேவீரன் சரத்திற்குங்குறித்ததுண்டோ. (௪௩)

பெற்றுடைவாளுநாளும் பிறந்துடையுரனும்பின்னும்
மற்றுடையெவையுந்தந்த மலரயன்முதலோர்வார்த்தை
விற்றொடையிராமன்கோத்து விடுதலும்விலக்குண்டெல்லாம்
இற்றிடைந்திறுதன்மெய்யே விளக்கின்முன்னிருளுண்டாமோ. (௪௪)

குன்றுநீயெடுத்தநாடன் சேவடிக்கொழுந்தாலுன்னை
வென்றவன்புரங்கள்வேவத் தனிச்சரந்துரந்தமேரு
என்றுணைக்கணவனாற்றற் குரனிலாதிற்றுவீழ்ந்த
அன்றெழுந்துயர்ந்தவோசை கேட்டிலைபோலுமம்மா. (௪௫)

கலிவிருத்தம்.

மலையெடுத்தெண்டிசை காக்குமாக்களை
நிலைகெடுத்தேனெனு மாற்றனேருநீ
சிலையெடுத்திளையவ னிற்பச்சேர்ந்திலை
தலையெடுத்தின்னமு மகளிற்றாழ்தியோ (௪௬)

ஏழைநின்னொளித்துறை யின்னதாமென
வாழியங்கோமக னறியவந்தநாள்
ஆழியுமிலங்கையு மழியத்தாழுமோ
ஊழியுந்தீயுமுன் னுயிரொடோயுமோ. (௪௭)

வெஞ்சினவரக்கரை விளித்துவீயுமோ
வஞ்சனைநீசெய வள்ளல்சீற்றத்தால்
எஞ்சலிலுலகெலா மெஞ்சுமெஞ்சுமென்
றஞ்சுகின்றேனிதம் கறனுஞ்சான்றரோ. (௪௮)

அங்கண்மாஞாலமும் விசும்புமஞ்சவாழ்
வெங்கணாய்புன்றொழில் விலக்கிமேற்கொளாய்
செங்கண்மானான்முகன் சிவனென்றேகொலோ
எங்கணாயகனையு நினைந்ததேழைநீ. (௪௯)

மானுயரிவரென மனக்கொண்டாயெனின்
கானுயர்வனாநிகர் காத்தவீரியன்
தானொருமனிதனாற் றளர்ந்துளானெனின்
தேனுயர்தெரியலான் றன்மைதேர்தியால். (௫௰)

இருவரொன்றிகழ்ந்தனை யென்னின்யாண்டெல்லை
ஒருவனன்றேயுல கழிக்குமூழியான்
செருவருங்காலையென் மெய்ம்மைதேர்தியால்
பொருவருந்திருவிழந்த நாயம்பொன்றுவாய். (௫௧)

பொற்கணான்றம்முனென் றினையபோர்த்தொழில்
விற்கொணாண்பொருவுதோ ளவுணர்வேறுளார்
நற்கணார்நல்லறந் துறந்தநாளினும்
இற்கணாலிறந்தில ரிறந்துநீங்கினார். (௫௨)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பூவிலோனாதியாகப் புலன்கள்போநெறியிற்போகாத்
தேவரோவவுணர்தாமோ நிலைநின்றுவ்வினையிற்றீர்ந்தார்
ஏவலெவ்வுலகுஞ்செய்யச் செல்வநிற்கியைந்தவென்றால்
பாவமோமுன்னீசெய்த தருமமோதெரியப்பாராய். (௫௩)

இப்பெருஞ்செல்வநின்க ணீந்தபேரீசன்யாண்டும்
அப்பெருஞ்செல்வந்துய்ப்பா னின்றுமாதவத்தினன்றே
ஒப்பருந்திருவுநீங்கி யுறவொடுமுலக்கவுன்னித்
தப்புதியறத்தையேழாய் தருமத்தைக்காமியாதே. (௫௪)

மறந்திறம்பாததோலா வலியினரெனினுமாண்டார்
அறந்திறம்பினருமக்கட் கருடிறம்பினருமன்றே
பிறந்திறந்துழலும்பாசப் பிணக்குடைப்பிணியிற்றீர்ந்தார்
துறந்தரும்பகைகண்மூன்றுந் துடைத்தவர்பிறர்யார்சொல்லாய். (௫௫)

தென்றமிழுரைத்தோன்முன்னா டதீர்முனிவர்யாரும்
புன்றொழிலரக்கர்க்காற்றே நோற்கிலய்புகுந்தபோதே
கொன்றருணின்னுலன்னார் குறைவதுசரதங்கோவே
என்றனர்யானேகேட்டே னீயிதற்கியைவசெய்தாய். (௫௬)

உன்னையுங்கேட்டுமற்றுன் னுற்றமுமுடையநாளும்
பின்னையிவ்வரக்கர்சேனைப் பெருமையுமுனிவர்பேணிச்
சொன்னபினுங்கைமூக்கு மும்பியர்தோளுந்தாளும்
சின்னபின்னங்கள்செய்த வதனைநீசிந்தியாயோ. (௫௭)

ஆயிரந்தடக்கையானின் னைக்கான்குகரமும்பற்றி
வாய்வழிகுருதிசோரக் குத்திவான்சிறையில்வைத்த
தூயவன்வயிரத்தோள்க ணிணைத்தவன்றெலைந்தமாற்றம்
கேயறிந்திலையோவேகு நெறியறிந்திலாதகீசா. (ருஅ)

கடிக்கும்வல்லரவுங்கேட்கு மந்திரங்களிக்கின்றேயை
அடுக்குமீதடாதென்றூன்ற வேதுவோடறிவுகாட்டி
இடிக்குநரில்லையுள்ளா ரெண்ணியதெண்ணியுன்னை
மூடிக்குநரொன்றபோது முடிவன்றிமுடிவதுண்டோ. (ருஅ)

கலிநிலைத்துறை.

என்றறத்துறை கேட்டலுமிருபதுநயனம்
மின்றிறப்பன வொத்தனவெயில்விடுபகுவாய்
குன்றிறத்தெழித் துரப்பினன்குறிப்பதென்காமன்
தன்றிறத்தையுங் கடந்ததுசீற்றத்தின்றகைமை. (சுo)

வளர்ந்தநாணினன் மாதிரமனைத்தையுமறைவித்
தளர்ந்ததோளின னனல்சொரிகண்ணினனிவனைப்
பிளந்துதின்பெனென் றுடன்றனன்பெயர்ந்தனன்பெயரான்
கிளர்ந்தசீற்றமுங் காதலுமெதிரொதிர்கிடைப்ப. (சுக)

அன்னகாலையி னநுமனுமருந்ததிக்கற்பின்
என்னையாளுடை நாயகன்றேவியையென்முன்
சொன்னநீசன்கை தொடுவதன்முன் றுகைத்துழக்கிப்
பின்னைநின்றது செய்குவெனென்பதுபிடித்தான். (சுஉ)

தனியினின்றனன் றலைபத்துங்கடிதுகத்தாக்கிப்
பனியின்வேலையி லிலங்கையைக்கீழுறப்பாய்ச்சிப்
புனிதமாதவத் தணங்கினைச்சுமந்தனன்போவான்
இனிதினென்பது நினைந்தனன்கரம்பிசைந்திருந்தான். (சுங)

ஆண்டவாளரக் கன்கனன்றண்டத்தையழிப்பான்
மூண்டகாலவெந் தீயெனமுற்றியசீற்றம்
நீண்டகாதனீர் நீத்தத்தின்வீவுறுநிலையின்
மீண்டுநின்றொரு தன்மையாலிவையிவைவிளம்பும். (சுச)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கொல்வெனென்றுடன்றேனுன்னைக் கொல்கிலென்குறித்துச்சொன்ன
சொல்லுளவவற்றுக்கெல்லாங் காரணந்தெரியச்சொல்லின்
ஒல்வதீதொல்லாதீதென் றெனக்குமொன்றுலகத்துண்டோ
வெல்வதுந்தோற்றருனும் விளையாட்டின்விளைந்தமேனுள். (சுரு)

ஒன்றுகேளுரைப்பகிற்கோ ருயிரொனவுரியோன்றன்னைக்
கொன்றுகோளிழைத்தானீநின் னுயிர்விடிற்கூற்றங்கூடும்

என்றனுருயிருநீங்கு மென்பதையியையவெண்ணி
அன்றுநான்வஞ்சஞ்செய்த தாரெனக்கமரினோர்வார். (௬௬)

மானென்பதறிந்துபோன மானிடராவார்மீண்டி
யானென்பதறிந்தால்வாரா ரேழைமையெண்ணிநோக்கல்
தேனென்பதறிந்தசொல்லாய் தேவர்தாம்யாவரோயெங்
கோனென்பதறிந்தபின்னைத் திறம்புவார்குறையினல்லால். (௬எ)

வென்றோருமிருப்பயார்க்கு மேலவர்விளிவிலாதோர்
என்றோருமிருப்பவன்றே யிந்திரனேவல்செய்ய
ஒன்றுதவுலகமூன்று முணர்கின்றவொருவன்யானே
மென்றோளாயிதற்குவேறோர் காரணம்விரிப்பதுண்டோ. (௬அ)

மூவருந்தேவர்தாமு முரணுகமுற்றுங்கொற்றம்
பாவைநின்பொருட்டினலோர் பழிபெறப்பயன்றீர்சோம்பின்
ஆவியின்மனிதர்தம்மை யடுகிலேனவவையீண்டுக்
கூவிநின்றேவல்கொள்வென் காணுதிகுதலைச்சொல்லாய். (௬௯)

சிற்றியற்சிறுமையாற்றல் சிறுதொழின்மறவரோடே
முற்றியதாவில்வீர முனிவென்கண்விளையாதேனும்
இற்றையிற்பகலினெய்தி யிருவரையொருகையாலே
பற்றினென்கொணருந்தன்மை காணுதிப்பிழைப்பிலாதாய் (எ0)

பதவியமனிதரேனும் பைந்தொடிநின்னைத்தந்த
உதவியையுணரநோக்கி னுயிர்கொலைக்குரியரல்லர்
சிதைவுறலவர்க்குவேண்டிற் செய்திறன்றேர்ந்ததெண்ணின்
இதனினக்கீதேயாகி னியற்றுவல்காண்டியின்னும். (எக)

பள்ளநீரயோத்திநண்ணிப் பரதனேமுதலினோராண்
டுள்ளவர்தம்மையெல்லா முயிர்குடித்தூழித்தீயின்
வெள்ளநீர்மிதிலையோரை வேரறுத்தெளிதினெய்திக்
கொள்வெனின்னுயிருமென்னை யறிந்திலைகுறைந்தநாளோய். (எஉ)

ஈதுரைத்தழன்றுபொங்கி யெரிகதிர்வாளைநோக்கித்
தீதுயிர்க்கிழைக்குநாளுந் திங்களோரிரண்டிற்றேய்ந்த
தாதலினின்றதெண்ணென் றறிந்தவாறறிவாயென்னாப்
போதரிக்கண்ணினாளை யகத்துவைத்தரப்பிப்போனான். (எ௩)

அஞ்சவித்தானுமொன்று லறிவுறத்தேற்றியானும்
வஞ்சியிற்செவ்வியாளை வசித்தென்பால்வருவீரன்றால்
நஞ்சுமக்காவெனென்னு நகையிலாமுகத்துப்பேழ்வாய்
வெஞ்சினத்தரக்கிமார்க்கு வேறுறவுணர்த்திப்போனான். (எ௪)

போயினனரக்கன்பின்னைப் பொங்கராறுங்கிக்கான்ற
தூயவெண்மதியையொத்த தோகையைத்தொடர்ந்துசுற்றித்

தீயவலரக்கிமார்க டெழீஇத்தெழித்தரப்பிச்சிந்தை
மேயினவண்ணமெல்லாம் விளம்புவருடன்றுமிக்கார். (எரு)

## கலிநிலைத்துறை.

முன்முன்னின்றூர் கண்கனல்சிந்தமுடுகுற்றூர்
மின்மின்னென்னுஞ் சூலமுவேலுமிவையோச்சிக்
கொன்மின்கொன்மின் கொன்றுகுறைத்துக்குடராரத்
தின்மின்றின்மி னென்றுதெழித்தார்சிலரெல்லாம், (எசு)

வையந்தந்தான்முகன் வமந்தன்மகன்மைந்தன்
ஐயன்வேதமாயிரம் வல்லோனறிவாளன்
மெய்யன்புன்பால் வைத்துளனல்லால்வினைவென்றேன்
செய்யும்புன்மை யாதுகொலென்றூர்சிலரெல்லாம். (எஎ)

மண்ணிற்றீய மானுயர்தத்தம்வழியோடும்
பெண்ணிற்றீயோய் நின்றுதன்மாயும்பிணிசெய்தாய்
புண்ணிற்கோலிட் டாலனசொல்லிப்பொதுநோக்கால்
எண்ணிக்காணுய் மெய்ம்மையுமென்றூர்சிலரெல்லாம். (எஅ)

புக்கவழிக்கும் போந்தவழிக்கும்புகைவெந்தீ
ஒக்கவிதைப்பா யுற்றனையன்றேவுணர்வில்லாய்
இக்கணமிற்றாய் முந்தினமெல்லாமினிவாழாய்
சிக்கவுரைத்தே மென்றுதெழித்தார்சிலரெல்லாம். (எகூ)

கொல்வானுற்றேர் பெற்றிமையாதுங்குறையாதாள்
வெல்வானங்கோன்றின்னு மின்வம்மென்பவர்மெய்யும்
வல்வாய்வெய்யோ னேவலுமெல்லாமனம்வைத்தாள்
நல்லாணல்ல கண்கள்கலுழ்ந்தேநகுகின்றூள். (அ0)

இன்னோரன்ன வெய்தியகாலத்திடைநின்றூள்
முன்னேசொன்னேன் கண்டகனவின்முடிவம்மா
பின்னேவாளா பேதுறவீரேற்பிழையென்றூள்
அன்னேநன்றென் றூரவரெல்லாமவிவுற்றூர். (அக)

அறிந்தாரன்ன முச்சடையென்பாளவள்சொல்ல
பிறிந்தார்சீற்ற மன்னனையஞ்சிப்பிறிதில்லாச்
செறிந்தாராய தீவினையன்னூர்தெறலெண்ணூர்
நெறிந்தாரோதிப் பேதையுமாவிங்கிலநின்றூள். (அஉ)

நிந்தனைப்படலம் முற்றிற்று.

ஆ_ படலம் - ச - இ திருவிருத்தம் - சஅகூ.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# திருக்குறள்.

அறத்துப்பால். இல்லறம்.

## முதலாம் - அதிகாரம் கடவுள்வாழ்த்து.

அகரமுதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு. க
கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழாஅ ரெனின். உ
மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார், நிலமிசை நீடுவாழ்வார். ௩
வேண்டுதல் வேண்டாமை யிலானடிசேர்ந்தார்க், கியாண்டு மிடும்பை யில ௪
இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. ௫
பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீரொழுக்க, நெறிநின்றார் நீடுவாழ்வார், ௬
தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க்கல்லால், மனக்கவலை மாற்ற லரிது. ௭
அறவாழியந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால், பிறவாழி நீந்த லரிது. ௮
கோளில்பொறியிற் குணமிலவேயெண்குணத்தான், றாளை வணங்காத் தலை. ௯
பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார். க0

## உ - ஆம் அதிகாரம் வான்சிறப்பு.

வானின்றுலகம் வழங்கி வருதலால், தானமிழ்த மென்றுணரற் பாற்று. க
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉ மழை. உ
விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின் றுடற்றும் பசி. ௩
ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும், வாரி வளங்குன்றிக் கால். ௪
கெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே, யெடுப்பதூஉ மெல்லாமழை. ௫
விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே, பசும்புற் றலைகாண் பரிது. ௬
நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந்தடிந்தெழிலி, தானல்கா தாகி விடின். ௭
சிறப்பொடு பூசனை செல்லாதுவானம், வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. ௮
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம், வானம் வழங்கா தெனின். ௯
நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும், வானின் றமையா தொழுக்கு. க0

## ௩ - ஆம் அதிகாரம் நீத்தார்பெருமை.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து, வேண்டும் பனுவற் றுணிவு. க
துறந்தார்பெருமைதுணைக்கூறின்வையத், திறந்தாரையெண்ணிக்கொண்டற்று.
இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார், பெருமை பிறங்கிற் றுலகு. ௩
உரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான், வரனென்னும் வைப்பிற்கோர்
வித்து. ௪
ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான், இந்திரனே சாலுங் கரி. ௫
செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலா தார். ௬
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரிவான் கட்டேயுலகு.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டி விடும். ௮
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது. ௯
அந்தணரென்போ ரறவோர்மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான். ௧௦, ஆ ௩௦

## ௪ - ஆம் அதிகாரம் அறன்வலியுறுத்தல்.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங், காக்க மெவனோ வுயிர்க்கு. ௧
அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை, மறத்தலி னூஉங்கில்லை கேடு. ௨
ஒல்லும் வகையா னறவினை யோவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல். ௩
மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன், ஆகுல நீர பிற. ௪
அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும், இழுக்கா வியன்ற தறம். ௫
அன்றறிவாமென்னா தறஞ்செய்கமற்றது, பொன்றுங்காற் பொன்றாத்துணை. ௬
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை, பொறுத்தானோ டூர்ந்தா னிடை. ௭
வீழ்நாள்படாஅமைநன் றாற்றி னஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங்கல்.
அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம், புறத்த புகழு மில. ௯
செயற்பால தோரு மறனே யொருவற், குயற்பால தோரும் பழி. ௧௦, ஆ ௪௦

## ௫ - ஆம் அதிகாரம் இல்வாழ்க்கை.

இல்வாழ்வா னென்பா னியல்புடையமூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை. ௧
துறந்தார்க்குந்துவ்வா தவர்க்குமிறந்தார்க்கும், இல்வாழ்வா னென்பான்றுணை.
தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானென்றாங், கைம்புலத்தா றோம்பறலை
பழியஞ்சிப்பாத்தூ ணுடைத்தாயின்வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்றுமில்.
அன்புமறனு முடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனு மது. ௫
அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்புறத்தாற்றிற், போஒய்ப் பெறுவதெவன்.
இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவனென்பான், முயல்வாரு ளெல்லாந்தலை. ௭
ஆற்றினொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை, நோற்பாரி னோன்மையுடைத்து.
அறனெனப்பட்டதே யில்வாழ்க்கையஃதும், பிறன்பழிப்ப தில்லாயினன்று.௯
வையத்துள்வாழ்வாங்குவாழ்பவன்வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்.

## ௬ - ஆம் அதிகாரம் வாழ்க்கைத்துணைநலம்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற்கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத்துணை. ௧
மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினு மில்.௨
இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென், இல்லவண் மாணாக் கடை. ௩
பெண்ணிற்பெருந்தக்க யாவுளகற் பென்னும், திண்மையுண் டாகப்பெறின். ௪
தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை.
தற்காத்துத்தற்கொண்டாற் பேணித்தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண். ௬
சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர், நிறைகாக்குங் காப்பே தலை. ௭
பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர்பெருஞ்சிறப்புப், புத்தேளிர் வாழுமுலகு.
புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன், ஏறுபோற் பீடு நடை. ௯

மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல னன்மக்கட்பேறு. க0, ஆ கூ0

## எ - ஆம் அதிகாரம் புதல்வரைப்பெறுதல்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற. க
எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப், பண்புடை மக்கட் பெறின். உ
தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொருள், தந்தம் வினையான் வரும். ௩
அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள், சிறுகை யளாவிய கூழ். ௪
மக்கண்மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர், சொற்கேட்ட லின்பஞ்செவிக்கு. ரு
குழலினி தியாழினி தென்பதம் மக்கள், மழலைச்சொற் கேளா தவர். ௬
தந்தைமகற் காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல். எ
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லா மினிது. அ
ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச், சான்றோ னெனக்கேட்டதாய். கூ
மகன்றந்தைக்காற்று முதவியிவன்றந்தை, என்னோற்றான்கொல்லெனுஞ்சொல்.

## அ - ஆம் அதிகாரம் அன்புடைமை.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும். க
அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு. உ
அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க், கென்போ டியைந்த தொடர்பு. ௩
அன்பீனு மார்வ முடைமை யதுவீனும், நண்பென்னு நாடாச் சிறப்பு. ௪
அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத், தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு. ரு
அறத்திற்கே யன்புசார் பென்ப ரறியார், மறத்திற்கு மஃதே துணை. ௬
என்பி லதனை வெயிற்போலக் காயுமே, அன்பி லதனை யறம். எ
அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண், வற்றன் மரந்தளிர்த்தற்று. அ
புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை, அகத்துறுப் பன்பி லவர்க்கு. கூ
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க், கென்புதோல் போர்த்த வுடம்பு. க0

## கூ - ஆம் அதிகாரம் விருந்தோம்பல்.

இருந்தோம்பியில்வாழ்வ தெல்லாம்விருந்தோம்பி, வேளாண்மை செய்தற்பொருட்டு. க
விருந்துபுறத்ததாத் தானுண்டல்சாவா, மருந்தெனினும்வேண்டற்பாற்றன்று. உ
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை, பருவந்து பாழ்படுதலின்று. ௩
அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து, நல்விருந் தோம்புவா னில். ௪
வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான்புலம்.
செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்து வானத்தவர்க்கு.
இனைத்துணைத் தென்பதொன் றில்லைவிருந்தின், துணைத்துணை வேள்விப்பயன்.
பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி, வேள்வி தலைப்படா தார்.
உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா, மடமை மடவார்க ணுண்டு. கூ
மோப்பக்குழையு மனிச்சமுகந்திரிந்து, நோக்கக்குழையும்விருந்து. க0, ஆ கூ0

## க0 - ஆ அம்திகாரம் இனியவைகூறல்.

இன்சொலாலீர மளைஇப் படிறிலவாம், செம்பொருள் கண்டார்வாய்ச்சொல்.

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந், தின்சொல னாகப் பெறின். உ
முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானாம், இன்சொ லினதே யறம். ந
துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும், இன்புறூஉ மின்சொலவர்க்கு
பணிவுடைய னின்சொல னாத லொருவற்க், கணியல்ல மற்றுப் பிற. ரு
அல்லவை தேய வறம்பெருகு நல்லவை, நாடி யினிய சொலின். சு
நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று, பண்பிற் றலைப்பிரியாச் சொல். எ
சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையும், இம்மையு மின்பந் தரும். அ
இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ, வன்சொல் வழங்குவது. க
இனிய வுளவாக வின்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. க0, ஆ_ா

## கக - ஆம் அதிகாரம் செய்ந்நன்றியறிதல்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமு மாற்ற லரிது. க
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது. உ
பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின், நன்மை கடலிற் பெரிது. ந
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்றெரிவார். ச
உதவி வரைத்தன் றுதவி யுதவி, செயப்பட்டார் சால்பின் வரைத்து. ரு
மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க, துன்பத்துட் டுப்பாயார் நட்பு. சு
எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண், விழுமந் துடைத்தவர் நட்பு. எ
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று. அ
கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த, ஒன்றுநன் றுள்ளக் கெடும். க
எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை, செய்ந்நன்றிகொன்ற மகற்கு.

## கஉ - ஆம் அதிகாரம் நடுவுநிலைமை.

தகுதி யெனவொன்று நன்றே பகுதியால், பாற்பட் டொழுகப் பெறின். க
செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி, எச்சத்திற் கேமாப் புடைத்து. உ
நன்றேதரினு நடுவிகந்தா மாக்கத்தை, அன்றே யொழிய விடல். ந
தக்கார் தகவில ரென்ப தவரவர், எச்சத்தாற் காணப் படும். ச
கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக், கோடாமை சான்றோர்க் கணி. ரு
கெடுவல்யா னென்ப தறிக தன்னெஞ்சம், நடுவொரீஇ யல்ல செயின். சு
கெடுவாக வையா துலக நடுவாக, நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. எ
சமஞ்செய்துசீர்தூக்குங் கோல்போலமைந்தொருபால், கோடாமை சான்றோர்
க்கணி. அ
சொற்கோட்டமில்லது செப்ப மொருதலையா, உட்கோட்ட மின்மைபெறின். க
வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தமபோற் செயின். ௰

## கந - ஆம் அதிகாரம் அடக்கமுடைமை.

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை, ஆரிரு ளுய்த்து விடும். க
காக்க பொருளா வடக்கத்தை யாக்கம், அதனினூஉங் கில்லை யுயிர்க்கு உ
செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந், தாற்றி னடங்கப் பெறின். ந
நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம், மலையினு மாணப் பெரிது. ச

எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளும், செல்வர்க்கே செல்வந் தகைத்து. ௫
ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின், எழுமையு மேமாப் புடைத்து. ௬
யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. ௭
ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயின், நன்றாகா தாகி விடும். ௮
தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே, நாவினாற் சுட்ட வடு. ௯
கதங்காத்துக்கற்றடங்க லாற்றுவான்செவ்வி, அறம்பார்க்கு மாற்றினுழைந்து,

## ௧௪ - ஆம் அதிகாரம் ஒழுக்கமுடைமை.

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம், உயிரினு மோம்பப் படும். ௧
பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித், தேரினு மஃதே துணை. ௨
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும். ௩
மறப்பினுமோத்துக்கொளலாகும்பார்ப்பான், பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்.
அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை, ஒழுக்க மிலான்க ணுயர்வு. ௫
ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தின், ஏதம் படுபாக் கறிந்து. ௬
ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின், எய்துவ ரெய்தாப் பழி, ௭
நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம், என்று மிடும்பை தரும். ௮
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல். ௯
உலகத்தோ டொட்ட வொழுகல்பலகற்றும், கல்லா ரறிவிலாதார். ௰, ஆ. ௧௪௰

## ௧௫ - ஆம் அதிகாரம் பிறனில்விழையாமை.

பிறன்பொருளாட்பெட்டொழுகும் பேதைமைஞாலத், தறம்பொருள்கண்டார் கணில். ௧
அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை, நின்றாரிற் பேதையா ரில். ௨
விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில், தீமை புரிந்தொழுகு வார். ௩
எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல். ௪
எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும், விளியாது நிற்கும் பழி. ௫
பகைபாவ மச்சம் பழியெனநான்கும், இகவாவா மில்லிறப்பான் கண். ௬
அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள், பெண்மை நயவாதவன்.
பிறன்மனைநோக்காதபேராண்மைசான்றோர்க், கறனொன்றோவான்றவொழுக்கு
நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பில், பிறர்க்குரியா டோடோயா தார். ௯
அறன்வரையானல்ல செயினும் பிறன்வரையாள், பெண்மை நயவாமைநன்று.

## ௧௬ - ஆம் அதிகாரம் பொறையுடைமை.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்த றலை. ௧
பொறுத்த லிறப்பினை யென்று மதனை, மறத்த லதனினு நன்று. ௨
இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள், வன்மை மடவார்ப் பொறை.
நிறையுடைமைநீங்காமைவேண்டிற்பொறையுடைமை,போற்றியொழுகப்படும்.
ஒறுத்தாரையொன்றாகவையாரே வைப்பர், பொறுத்தாரைப் பொன்போற்பொதிந்து. ௫
ஒறுத்தார்க்கொருநாளை யின்பம்பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும்புகழ்.

திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந், தறனல்ல செய்யாமை நன்று. ௭
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம், தகுதியான் வென்று விடல். ௮
துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வாய், இன்னாச்சொ னோற்கிற்பவர். ௯
உண்ணாதுநோற்பார் பெரியர்பிறர்சொல்லும், இன்னாச்சொ னோற்பாரிற்பின்.

## ௧௭ - ஆம் அதிகாரம் அழுக்காறாமை.

ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத், தழுக்கா றிலாத வியல்பு. ௧
விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார்மாட்டும், அழுக்காற்றி னன்மைபெறின். ௨
அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம், பேணா தழுக்கறுப்பான். ௩
அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றின், ஏதம் படுபாக் கறிந்து. ௪
அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார், வழுக்கியுங் கேடீன் பது. ௫
கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம், உண்பதூஉ மின்றிக்கெடும். ௬
அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள், தவ்வையைக் காட்டி விடும். ௭
அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும். ௮
அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான், கேடு நினைக்கப் படும். ௯
அழுக்கற் றகன்றாரு மில்லை யஃதிலரார், பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். ௧௦

## ௧௮ - ஆம் அதிகாரம் வெஃகாமை.

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக், குற்றமு மாங்கே தரும். ௧
படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார், நடுவன்மை நாணு பவர். ௨
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே, மற்றின்பம் வேண்டு பவர். ௩
இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற, புன்மையில் காட்சியவர். ௪
அஃகி யகன்ற வறிவென்னாம் யார்மாட்டும், வெஃகி வெறிய செயின். ௫
அருள்வெஃகியாற்றின்கணின்றான்பொருள்வெஃகிப், பொல்லாதசூழக்கெடும்.
வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின், மாண்டற் கரிதாம் பயன். ௭
அஃகாமைசெல்வத்திற்கியாதெனின்வெஃகாமை,வேண்டும்பிறன்கைப்பொருள்
அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேரும், திறனறிந் தாங்கே திரு. ௯
இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும், வேண்டாமை யென்னுஞ்செருக்கு.

## ௧௯ - ஆம் அதிகாரம் புறங்கூறாமை.

அறங்கூறா னல்ல செயினு மொருவன், புறங்கூறா னென்ற லினிது. ௧.
அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே, புறனழீஇப் பொய்த்து நகை. ௨
புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல், அறங்கூறு மாக்கந் தரும். ௩
கண்ணின்றுகண்ணறச் சொல்லினுஞ்சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச்
சொல். ௪
அறஞ்சொல்லுநெஞ்சத்தானன்மைபுறஞ்சொல்லும், புன்மையாற்காணப்படும்.
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளும், திறந்தெரிந்து கூறப் படும். ௬
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி, நட்பாட றேற்றா தவர். ௭
துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார், என்னைகொ லேதிலார் மாட்டு. ௮
அறனோக்கியாற்றுங்கொல்வையம்புறனோக்கிப், புன்சொலுரைப்பான்பொறை.
ஏதிலார்குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின், தீதுண்டோமன்னு முயிர்க்கு.

## உ௰ - ஆம் அதிகாரம் பயனிலசொல்லாமை.

பல்லார் முனியப் பயனிலசொல்லுவான், எல்லாரு மெள்ளப் படும். க
பயனில பல்லார்முற் சொல்ல னயனில, நட்டார்கட் செய்தலிற் றீது. உ
நயனில னென்பது சொல்லும் பயனில, பாரித் துரைக்கு முரை. ௩
நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப், பண்பில்சொற் பல்லா ரகத்து. ௪
சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில, நீர்மை யுடையார் சொலின். ரு
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல், மக்கட் பதடி யெனல். ௬
நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர், பயனில சொல்லாமை நன்று. எ
அரும்பய னாயு மறிவினார் சொல்லார், பெரும்பய னில்லாத சொல். அ
பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த, மாசறு காட்சியவர். க
சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற் பயனிலாச் சொல்.

## உக - ஆம் அதிகாரம் தீவினையச்சம்.

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர், தீவினை யென்னுஞ் செருக்கு. க
தீயவை தீய பயத்தலாற் றீயவை, தீயினு மஞ்சப் படும். உ
அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய, செறுவார்க்குஞ் செய்யா விடல். ௩
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. ௪
இலனென்று தீயவை செய்யற்க செய்யின், இலனாகு மற்றும் பெயர்த்து. ரு
தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால, தன்னை யடல்வேண்டா தான். ௬
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை, வீயாது பின்சென் றடும். எ
தீயவை செய்தார் கெடுத னிழறன்னை, வீயா தடியுறைந் தற்று. அ
தன்னைத்தான் காதல னாயினெனைத் தொன்றுந், துன்னற்க தீவினைப் பால். க
அருங்கேட னென்ப தறிக மருங்கோடித், தீவினை செய்யானெனின். ஆ உக௰

## உஉ - ஆம் அதிகாரம் ஒப்புரவறிதல்.

கைம்மாறுவேண்டா கடப்பாடுமாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு. க
தாளாற்றித்தந்தபொருளெல்லாந்தக்கார்க்கு, வேளாண்மைசெய்தற்பொருட்டு.
புத்தேளுலகத்து மீண்டும்பெறலரிதே, யொப்புரவி னல்ல பிற. ௩
ஒத்ததறிவா னுயிர்வாழ்வான்மற்றையான், செத்தாருள் வைக்கப் படும். ௪
ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம், பேரறி வாளன் திரு ரு
பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ, நயனுடை யான்கட் படின். ௬
மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம், பெருந்தகை யான்கட் படின். எ
இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார், கடனறி காட்சி யவர். அ
நயனுடையானல்கூர்ந்தா னாதல்செயுநீர்மை, செய்யா தமைகலா வாறு. க
ஒப்புரவினால்வருங் கேடெனி னஃதொருவன், விற்றுக்கோட் டக்க துடைத்து.

## உ௩ - ஆம் அதிகாரம் ஈகை.

வறியார்க்கொன்றீவதே யீகைமற்றெல்லாம், குறியெதிர்ப்பை நீரதுடைத்து. க
நல்லாறெனினுங் கொளறீதுமேலுலகம், இல்லெனினு மீதலே நன்று. உ
இலனென்னுமெவ்வ முரையாமையீதல், குலனுடையான் கண்ணே யுள ௩

இன்னா திரக்கப் படுத லிரந்தவர், இன்முகங் காணு மளவு, ௪
ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை, மாற்றுவா ராற்றலிற் பின். ௫
அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன், பெற்றான் பொருள்வைப் புழி. ௬
பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும், தீப்பிணி தீண்ட லரிது. ௭
ஈத்துவக்குமின்ப மறியார்கொறாமுடைமை, வைத்திழக்கும் வன்கணவர். ௮
இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய, தாமே தமிய ருணல். ௯
சாதலி னின்னாத தில்லை யினிததூஉம், ஈத லியையாக் கடை. ௧௦, ஆ ௨௩௦

## ௨௪ - ஆம் அதிகாரம் புகழ்.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல, தூதிய மில்லை யுயிர்க்கு. ௧
உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும்புகழ். ௨
ஒன்றா வுலகத் துயர்ந்தபுக ழல்லால், பொன்றாது நிற்பதொன் றில். ௩
நிலவரைநீள்புக ழாற்றிற்புலவரைப், போற்றாது புத்தே ளுலகு. ௪
நத்தம்போற்கேடு முளதாகுஞ்சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது. ௫
தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று. ௬
புகழ்படவாழாதார் தந்நோவார்தம்மை, இகழ்வாரை நோவ தெவன். ௭
வசையென்பவையத்தார்க் கெல்லாமிசையென்னும், எச்சம் பெறாஅவிடின். ௮
வசையிலாவண்பயன் குன்றுமிசையிலா, யாக்கை பொறுத்தநிலம். ௯
வசையொழியவாழ்வாரே வாழ்வாரிசையொழிய, வாழ்வாரே வாழாதவர். ௧௦

## இல்லறவியன் முற்றிற்று.

## துறவறம். ௨௫ - ஆம் அதிகாரம் அருளுடைமை.

அருட்செல்வஞ்செல்வத்துட் செல்வம்பொருட்செல்வம், பூரியார்கண்ணுமுள.
நல்லாற்றானாடி யருளாள்கபல்லாற்றால், தேரினு மஃதேதுணை. ௨
அருள்சேர்ந்தநெஞ்சினார்க் கில்லையிருள்சேர்ந்த, இன்னா வுலகம் புகல். ௩
மன்னுயிரோம்பி யருளாள்வார்க்கில்லென்ப, தன்னுயி ரஞ்சும் வினை. ௪
அல்லலருளாள்வார்க் கில்லைவளிவழங்கு, மல்லன்மா ஞாலங் கரி. ௫
பொருணீங்கிப்பொச்சாந்தா ரென்பரருணீங்கி, அல்லவை செய்தொழுகுவார்.
அருளில்லார்க்கவ்வுலக மில்லைபொருளில்லார்க், கிவ்வுலக மில்லாகியாங்கு. ௭
பொருளற்றார்பூப்ப ரொருகாலருளற்றார், அற்றார்மற் றாத லரிது. ௮
தெருளாதான்மெய்ப்பொருள் கண்டற்றாற்றேரின், அருளாதான் செய்யு மறம்.
வலியார்முற்றன்னை நினைக்கதான்றன்னின், மெலியார்மேற் செல்லு மிடத்து.
ஆ ௨௫௦.